செங்கை ஆழியான்

55



# கொழும்பு லொட்ஜ்

க. பாணிதரன்
2007-04-09

# கொழும்பு லொட்ஜ்

செங்கை ஆழியான்

வெளியீடு:

யாழ் இலக்கிய வட்டம்

யாழ்ப்பாணம் - இலங்கை;

☼ முதற்பதிப்பு: டிசம்பர், 1998

☼ (C) திருமதி கமலா குணராசா
1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

☼ அச்சுப்பதிவு: போஸ்கோ பதிப்பகம்
252, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

விலை: ரூபா 50/-

**COLOMBO LODGE**

*NOVEL*

*by*

**Sengai Aaliyan**
**(Dr. K. Kunarasa** *M. A., Ph. D.*)
*Registrar, University of Jaffna,*
*Sri Lanka.*

*First Edition: December 1998.*

(C) **Mrs. Kamala Kunarasa**
*1, First Lane,*
*Brown Road,*
*Jaffna.*

*Printers:* **Boseco Pathippagam**
*252, Point Pedro Road,*
*Nallur.*

*PRICE: Rs.* 50/-

*Published by:*
YARL ILAKKIYA VADDAM
*Jaffna Literary Circle,*
*Jaffna, Sri Lanka.*

# முன்னுரை

''கொழும்பு லொட்ஜ்'' என்ற இந்நாவல், இலங்கையின் ஆட்சிப் பொறுப்பைச் சந்திரிகா அரசு ஏற்றுக் கொண்ட ஆரம்பகால வேளையில் எழுதப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் பெருநிலப்பரப்பிற்குமிடையிலான ஆனையிறவுப்பாதை அடைக்கப்பட்ட நிலையில் கிளாலி கடலேரியூடாக யாழ்ப்பாண மக்கள் இரவு வேளைகளில் பயணம் செய்து, பயண இடர் பாடுகளூடாகக் கொழும்பு வந்து, அங்குள்ள லொட்ஜுகளில் பல்வேறு கனவுகளோடும், ஏக்கங்களோடும் வாழ்ந்த துயரங்களைச் சித்திரிப்பது. இன்றைய அவலச்சூழ்நிலையில், நமது மக்கள் பாரம்பரியமான பண்பாட்டு இறுக்கங்களையும், மரபுக் கட்டுப்பாடுகளையும் உதறிவிடும் மீறல்களை இந்தநாவல் விபரிக்கின்றது.

'குமுதம் - ஏயர் இந்தியா' என்பன இணைந்து நடாத்திய குறுநாவல் போட்டியில் தெரிவான முதல் ஐந்து குறுநாவல்களில் ஒன்று இந்தக் 'கொழும்பு லொட்ஜ்' ஆகும். அவ்வேளை 'குமுதம்' சஞ்சிகையின் ஆசிரியராகச் சுஜாதா விளங்கினார். குமுதத்தில் பிரசுரமாவதற்கான அனுமதியும் என்னிடமிருந்து பெறப்பட்ட நிலையில், சுஜாதாவின் ஆசிரிய விலகல் இக்குறுநாவலையும் பிரசுரிப்பிலிருந்து அகற்றிவிட்டது.

அதன் பின்னர் தினக்குரல் ஞாயிறு மலரில் 1977களில் இது தொடராக வெளிவந்தது. கொழும்பு லொட்ஜைக் குமுதம் குறுநாவல் போட்டியில் தெரிவு செய்தமைக்காகச் சுஜாதாவுக்கும், இதனைத் தொடராக வெளியிட்டமைக்காகத் தினக்குரல் ஆசிரியருக்கும், சிறப்பாக அமரர் ராஜகோபாலுக்கும் என் நன்றிகள். இந்நாவலைச் சிறப்பாகப் பதிப்பித்துதவிய போஸ்கோ பதிப்பக உரிமையாளர் திரு. ம.சி. சந்திரபோஸிற்கும் என் கடப்பாடுடைய நன்றி.

இந்நூல் யாழ் இலக்கிய வட்டத்தின் 60-வது நூலாகும். இதனை வெளியிடும் யாழ் இலக்கிய வட்டத்தினருக்கும் என் நன்றிகள்.

- செங்கை ஆழியான்.

1, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். 10-12-1998

## ஆசிரியரின் ஏனைய நூல்கள் :

* நந்திக்கடல்
* ஆச்சி பயணம் போகிறாள்
* அக்கினிக்குஞ்சு
* தீம்தரிகிடதித்தோம்
* யாழ்ப்பாணத்து இராத்திரிகள்
* வாடைக்காற்று
* பிரளயம்
* இரவின் முடிவு
* காட்டாறு
* கனவுகள். கற்பனைகள், ஆசைகள்
* கங்கைக் கரையோரம்
* அலைகடல்தான் ஓயாதோ?
* சித்திரா பௌர்ணமி
* முற்றத்து ஒற்றைப் பனை
* இதயமே அமைதிகொள்
* நடந்தாய் வாழி வழுக்கியாறு
* யானை
* மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
* 24 மணி நேரம்
* 12 மணி நேரம்
* மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது
* மழைக்காலம்
* மண்ணின் தாகம்
* அக்கினி
* கந்தவேள் கோட்டம்
* ஜன்மபூமி
* யாக குண்டம்
* ஆறுகால் மடம்
* செங்கை ஆழியான் நாவல்கள்
* இடுகுவேலி
* ஓ அந்த அழகிய பழைய உலகம்
* கொத்தியின் காதல்
* செங்கை ஆழியான் கதைகள்
* காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள்
* ஒரு மைய வட்டங்கள்
* கடல் கோட்டை
* நல்லை நகர் நூல்
* குவேனி
* காவோலை
* THE BEAST
* பூதத்தீவுப் புதிர்கள் *(சிறுவர் நாவல்)*
* ராத்ரிய நொனஷய் *(சிங்களச் சிறுகதைத் தொகுதி)*
* இரவு நேரப் பயணிகள்
* ஈழத்தவர் வரலாறு
* கொழும்பு லொட்ஜ்

# கொழும்பு லொட்ஜ்

## 1

அகாலவேளையில் லொட்ஜின் வெளிக்கேற்றை எவரோ படபடவெனத் தட்டினார்கள்.

வெளித்திண்ணையில் ஐம்பது ரூபா வாடகைப் பாய்களில் கிழங்கு அடுக்கிய மாதிரி வரிசையாகப் படுத்திருந்த யாழ்ப்பாணிகள் சிலரின் தூக்கம் கலைகிறது. மறுபுறம் சலிப்புடன் திரும்பிப் படுத்துக்கொள்கிறார்கள்.

போர்ட்டிக்கோவின் இரண்டடி அகலவெளி மேடையில் முடங்கிக்கிடந்த லொட்ஜ் காவலாளி இராமையா சலிப்புடன் விழிப்புற்று எழுந்தான்.

''பரதேசிகள் '' என்று தனக்குள் முணுமுணுத்தவாறு வெளிக்கேற்றை நோக்கிச் சென்றான். தன் தூக்கத்தைக் கலைத்த கோபம் குரலில் ஆத்திரமாக மேலோங்க...

''கவுத?'' என்றான் சிங்களத்தில்.

''அது நான் ''

''யாரா இருந்தாலும் இங்கு இப்ப இடமில்லை, சார், லொட்ஜ் புல், வேறை இடம் பாருங்க...''

அவன் பொய் சொல்கிறான். லொட்ஜின் அறைகள் எல்லாம் யாழ்ப்பாணத்துச் சனத்தால் நிரம்பி வழிகின்றது என்பது உண்மை. போர்ட்டிக்கோத்தரை, பக்க விறாந்தை, முன்முற்றம் எல்லாம் யாழ்ப்பாணிகள் பாய்களில் வரிசையாக வளர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

என்றாலும் பாத்ரூமிற்கு முன்னால் மூன்று பாய்கள் விரிக்கத்தக்க இடமிருக்கிறது. லொட்ஜ் மனேச்சர் சங்கரவேல் தூங்கப்போகுமுன் இராமையாவிடம் கொடுத்துவிட்டுப்போன புற்பாய்களில் மூன்று இன்னமும் விரிக்கப்படாமல் இருக்கின்றன.

''இராமையாவே, அது நான் பாலசுப்பிரமணியம்...'' என்று கேற்றிற்கு வெளியிலிருந்து குரல் ஒலிக்கிறது.

தனது பெயர் கூறப்பட்டதும் இராமையா குழைந்து போனான். யாரோ தெரிந்தவர், இங்கு அடிக்கடி வருபவராக இருக்கவேண்டும்.

வெளிக்கேற்றின் சிறிய கதவைத்திறந்து பார்த்தபோது பாலசுப்பிரமணியம் நின்றிருந்தார்.

''அட நம்ம சாரே? வாங்கோ...''

முன்னர் அவரிடம் அடிக்கடி கைநீட்டி வாங்கிச் சுவை கண்டவன். அவரும் அடிக்கடி அவனைக் கவனித்து வந்திருக்கின்றார்.

''யாழ்தேவி லேற்றாகிவிட்டது. வவுனியாவிலிருந்து புறப்படும்போதே இரண்டு மணித்தியாலம் லேற். வழி வழியில மினக்கெட்டு இரவு பதினொரு மணிக்குத்தான் கோட்டைக்கு வந்தது. அதுதான்...''

அவர் உள்ளே நுழைந்தார்.

நள்ளிரவுத் தூக்கத்தை இருவர் பேசிக்குலைப்பது இரத்தினத்தாருக்குக் கோபத்தை மூட்டியது. பாயில் கிடந்தவாறே தலையை உயர்த்தி,

''உந்தக் கோதாரிக் கதைகளையெல்லாம் வெள்ளன வைச்சுக்கொள்ளுங்கோ. மனிசர் நிம்மதியாகத் தூங்கவும் முடியவில்லை.''

இருவரும் குரல்வந்த பக்கமாகப் பார்த்தனர். மெல்லிய வெளிச்சத்தில் வரிசையாகக் கிடந்த ஐம்பத்தேழு உடம்புகளில் எது பேசியது என்பது தெரியவில்லை.

''சார்... நீங்க அந்தப் போர்ட்டிக்கோக் குந்தில் படுங்கோ. நான் அங்கால படுக்கிறன். பாய் வேணாம். நீங்க வெள்ளென வந்ததாக மனேச்சருக்குச் சொல்லுறன்.''

''வேணாம் இராமையா. சரியாக வந்த நேரத்தையே சொல்லு'' எனப் பாலசுப்பிரமணியம் அவசரமாகக் குறுக்கிட்டார்.

''சரிங்க...'' என்றான் அவன் வியப்புடன்.

அவர் கையிலிருந்த றவலிங்பாக்கைத் திறந்து சாறம் ஒன்றை எடுத்து அணிந்துகொண்டு, றவலிங் பாக்கைத் தலையணையாக்கிப் படுத்துக்கொண்டார்.

கண்களை மூடியபோது விழிக்குள் பத்மா தெரிந்தாள்.

கொழும்பு லொட்ஜ்

" நல்லா இருக்கிறியளா ? "

" ஓம் பத்மா. நல்லா இருக்கிறதாப் பொய் சொல்லவா ? "

விழிகளிலிருந்து நீர் கோடிட்டது. தூக்கம் வரவில்லை.

எழுந்து அமர்ந்துகொண்டார்.

லொட்ஜின் கீழ்த்தளத்தில் ஆறு அறைகள். மேல் தட்டில் ஆறு அறைகள். எல்லாம் பன்னிரண்டு தர பத்துத் தான். இவற்றைவிட மேலேயும் கீழேயும் இருக்கின்ற ஹோல்களைப் பலகைகளால் தடுப்புச்செய்து பத்துத் தர எட்டுப் பரப்பில் ஐந்து அறைகள்.

சுற்று விறாந்தை " ட " வடிவில் இருக்கிறது. ஒரு பக்கத்தில் தொடர்ச்சியாக ஏழு கழிப்பறைகள். இன்னொரு பக்கத்தில் பெரியதொரு நீர்த்தொட்டி. அதுவே பொதுக் குளியலறை. மேல்மாடியிலுள்ள கழிப்பறைகளும் குளியலறைகளும் பெண்கள் பாவனைக்கு ஒதுக்கப்பட்டவை.

இவற்றினுள் காற்று எப்படி நுழைகிறது. மனிதர்கள் ஒருவரிலொருவர் இடிபடாமல் எப்படி நடமாடுகிறார்கள் என்பவையெல்லாம் கேட்கக்கூடாத விடயங்கள்.

கொழும்பில் இதைப்போல இன்று எத்தனை லொட்ஜ்கள்?

இது இன்று இலாபகரமான தொழிலாகிவிட்டது. பெரும்பாலும் இவற்றை நடத்துபவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள்தாம். பெரியதொரு வீட்டைப் பெருந்தொகை அட்வான்ஸ் கொடுத்து வாடகைக்கு எடுத்தால் போதும்.

—லொட்ஜ் தயார்.

சனம் நிரம்பி வழியும்.

தொண்ணூறுகளில் இரண்டாவது ஈழயுத்தம் தொடங்கியதும் கொழும்பில் லொட்ஜ்களின்பாடு படுகொண்டாட்டம். வெளிநாட்டுக்குப் போகிறவர்கள், வெளிநாடுகளில் இருப்பவர்களோடு பேசவருபவர்கள், பேசிப் பணம்பெற வருபவர்கள்... இங்கிருந்து 'ஹலோ' என்றால் அங்கிருந்து சிலருக்குக் கிலோக்கணக்கில் பணம் வரும்.

மணிக்கணக்கில் பேசி கையிலிருக்கும் கடன்பணத்தையும் தொண்டை நீரையும் கரைத்தும் எதுவித பயனுமின்றிக் கண்ணீருடன் திரும்புபவர்களும் பலர் உள்ளனர்.

எத்தனை வகை மனிதர்கள்?

மகனை வெளிநாட்டுழைப்பிற்கு அனுப்ப வந்திருக்கும் இரத்தினத்தார் குடும்பம்.

புருஷனோடு போனில்பேச பக்கத்துவீட்டுப் பரமலிங்கத்துடன் வந்திருக்கும் புஷ்பா. மணமகளாகக் கனடாவிற்குப் பயணப்படக் காத்திருக்கும் சசிகலா, தாய், தமையன்.

ஜேர்மனியிலிருந்து வரப்போகும் மாப்பிள்ளையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மலரும் இருபகுதிக் குடும்பத்தினரும்.

மகனோடு பறைந்து பட்டனுப்பிய கடனுக்குப் பணம் பெற வந்திருக்கும் பாக்கியமும் புருஷனும்.

இப்படி எத்தனைபேர்?

எல்லாவற்றிற்கும் மேலாகப் பிள்ளைகளோடு முறை வைத்துப்பேசிப் பணங்கறக்க வந்திருக்கும் வைரமுத்தண்ணர்.

கனடாவிலிருக்கும் மகன் ஸ்பொன்சர் பண்ணியதால் பயணத்திற்காகக் காத்திருக்கும் தர்மர் குடும்பம்.

இங்கு எல்லாரும் காத்திருக்கிறார்கள்.

தொலைபேசி ஒவ்வொரு தடவை சிணுங்கும்போதும் அவர்கள் தங்களுக்கு விடிவு வந்துவிட்டதாகப் பதறு கிறார்கள்.

அதேபோலப் பொலீஸார் புலிகளைத் தேடுவதாக லொட்ஜைச் சுற்றி வளைக்கும்போது, எலிகளின் வளை களுக்குள் புகுந்த பூனைகளைக் கண்டவர்களாக நடுங்கு கிறார்கள்.

* * *

அதிகாலை கழிப்பறைகளுக்கு முன் காத்திருந்தபோது, இரத்தினத்தாரைப் பாலசுப்பிரமணியம் சந்திக்க நேர்ந்தது.

''அட எங்கட பாலாவே? நீ தானே அர்த்த சாமத் தில வந்து சத்தம் போட்டனி?'' என்று இரத்தினத்தார் வியப்புத் தெரிவித்தார்.

அவர்கள் இருவரும் ஒரே பாடசாலையில் கல்வி கற்றவர்கள். இடைநடுவில் இரத்தினத்தாரை கல்வி கைவிட தகப்பனின் சந்திக்கடையைப் பொறுப்பேற்றுக் கொண்டவர்.

பாலசுப்பிரமணியம் மூன்று 'சீ' எடுத்துப் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரியாகி வெளிவந்து ஆசிரியராகி, அதிபராகி ஓய்வு பெற்று...

''என்ன கடும் யோசனை?'' என்று இரத்தினத்தார் மீண்டும் கேட்டபோது,

''உவங்கள் உள்ளுக்குப் போனா கெதியில வெளியில வரமாட்டான்கள். அங்க என்ன செய்யிறாங்கள்?

போனமா வந்தமா என்றில்லாமல்...'' என்றார் பால சுப்பிரமணியம்.

அத்துடன், ''என்ன கொழும்புக்கு?'' என்று இரத்தினத்தாரைக் கேட்டார்.

''நடுவிலானை வெளிநாட்டுக்கு அனுப்ப வந்தனாங்கள். ஒருத்தனையாவது அனுப்பாமல் சரிவராது. மூன்று குமருகள் இருக்குது...''

''எந்த நாட்டிற்கு?''

''ஜேர்மனிக்குத்தான்...''

''ஆரும் ஸ்பொன்சர் பண்ணுகினமோ? ஏஜண்ட் மூலமோ?''

''எனக்கு ஆர் இருக்கினம் ஸ்பொன்சர் பண்ண... ஏஜண்ட் மூலந்தான்.''

''எவ்வளவு கட்டினனி?''

''மூன்றரை... நல்ல ஏஜண்டுப் பொடியன்...''

''ஏஜண்டுகளில் நல்லது என்றில்லை. அப்ப... எல்லாம் சரி...''

''நீ என்ன கேக்கிறாய்?''

''வீடு வளவு நகை நட்டெல்லாம் சரியோ என்று கேட்கிறன்.''

இரத்தினத்தார் பாலசுப்பிரமணியத்தை இளக்காரமாகப் பார்த்தார்.

''பொம்பிளைப் பிள்ளைகளுக்கெனச் சேர்த்து வைச்சது. பொடியன் தான் போய் ஒரு வரியத்தில உழைச்சு

அனுப்புறன் என்கிறான். பொட்டையளும் தம்பிக்காரன் அந்தக்காசில போகட்டும். இருக்கிற காசு ஒரு பியோனை எடுக்கவே காணாது அனுப்புங்கோ என்றிட்டாளவை. பிறகென்ன? சரியாகப்பட்டுது...''

அவர் கூறிக்கொண்டிருக்க பாலசுப்பிரமணியத்தார் காலியான கழிப்பறை ஒன்றிற்குள் புகுந்தார். இரத்தினத்தார் யோசித்தவாறு நின்றிருந்தார்.

அவர் ஒரு சாதாரண யாழ்ப்பாணத்துத் தந்தை. வெளிநாடுகளுக்குச் சென்றுழைத்து அனுப்பி, ஊரிலுள்ள மண்வீடுகளைக் கல்வீடுகளாக்கிய, கூடப்பிறந்ததுகளைக் கரைசேர்த்த நல்ல பிள்ளைகள் பலரை அவர் கண்டிருக்கிறார். அதற்கு உதாரணங்களும் வைத்திருக்கிறார்.

''சுருட்டுக்கொட்டில் கனகரின்ர ஒரேயொரு பெடியன் பிரான்சுக்குப் போனான். இண்டைக்கு எட்டுவரியத்தில கனகரின் எல்லாப் பொடியளும் பொட்டையளும் பிரான்சில. அவன் ஒருவனே கூப்பிட்டிட்டான். ஊரில கனகரும் மனிசியுந்தான். அல்பங்களைப் பார்த்துக்கொண்டிருக்கினம்.''

வீட்டை விற்றுப் பிரான்சுக்கு மகனை அனுப்பி வைத்த நடராசா இன்று நடுத்தெருவில் நிற்பதும், அவரின் மகன் பிரான்சில் குடித்து வெறித்துத் திரிவதும் இரத்தினத்தாருக்குத் தெரியாது என்றில்லை. செல்லத்துரையின் மகன் வெளிநாட்டில் ஒரு வெள்ளைக்காரியைக் கட்டிக்கொண்டு தாய் தகப்பனை மறந்து போனதும் இரத்தினத்தாருக்குத் தெரியாத சங்கதிகளல்ல.

'வளர்ப்புச் சரியில்லை. என்ர பொடி அப்படிச் செய்யாது. பொறுப்புணர்ந்த பிள்ளை' எனத் தனக்குத் தானே கூறிக்கொண்டபோது பாலசுப்பிரமணியத்தார் வெளியில் வந்தார்.

'' விசர் வேலை '' என்றார் பாலசுப்பிரமணியம்.

'' எதைச் சொல்லுறாய்?''

'' இவ்வளவு காசு செலவழிச்சு இப்ப வெளிநாட்டுக்கு அனுப்புறது. ஐந்து பத்து வரியத்துக்கு முந்தியெண்டால் பரவாயில்லை. இப்ப எல்லாரையும் திருப்பி அனுப்புற தெண்டு நிக்கிறாங்கள்.''

'' அது சுவிசில பாலா; ஜேர்மனியில அப்படியில்லை.''

''என்னவோ சொல்லிப்போட்டன். இருக்கிற காசை பாங்கில போட்டால் வட்டி வரும், சீவிக்கலாம். ஏஜண் டிட்ட கொடுத்திட்டு ஏமாந்து நிக்காதை. முப்பது வரிய மாகச் சேர்த்ததை மூண்டு நாளில இழந்து நிக்காதை இரத்தினம் ''

-என்றபடி பாலசுப்பிரமணியம் தண்ணீர்த் தொட்டியை நோக்கிச் செல்ல, பொங்கிய பால் சட்டென அடங்கிய நிலையில் இரத்தினத்தார் திக்பிரமைபிடித்துச் சற்றுநேரம் நின்றுவிட்டார்.

''உவர் கொதியில சொல்கிறார் இரத்தினமண்ணை. நீங்க போங்க போங்கோ '' என்று பக்கத்தில் நின்ற பரமசிவம் ஆறுதல் கூறியது மனத்திற்குத் தெம்பாக இருந்தது.

அப்படித்தான் இருக்கும்.

காலைக்கடன்களை அவசரமாக முடித்துவிட்டு இரத்தினத்தார் மனைவி தவமணியிடம் வந்தார். பாலசுப்பிரமணியம் கிளறிவிட்ட சாம்பல் தணலாகக் கனன்றது.

அவர்கள் கொழும்புக்கு வந்து பதினாறு நாள்களாகின்றன.

## கொழும்பு லொட்ஜ்

''உடன் வருக. 26ஆந் திகதி இரவு பிளைற்'' என ஏஜண்டுக்காரன் அறிவித்திருந்தான். அவர்கள் ஊரில் எல்லோரிடமும் ஆரவாரமாக விடைபெற்று, அவஸ்தைப் பட்டு ஒருவிதமாகக் கிளாலி தாண்டிக் கொழும்பு வந்து சேர்ந்தனர். இருபத்திநாலாந் திகதியே அவர்கள் இங்கு வந்து சேர்ந்து விட்டனர்.

''நீங்கள் வரப்பிந்துமென்று உங்கட மகனின்ர இடத்தை வேறொருவருக்குக் கொடுத்திட்டம். அடுத்த பிளைற்றில் நிச்சயம் அனுப்புவம். ஒரு பத்துநாள் பொறுத் திருங்கோ...'' என்று ஏஜண்டுக்காரன் சமாதானப்படுத் தினான்.

''தம்பி, காசு கட்டியே ஆறு மாதமாகின்றது'' என இரத்தினத்தார் இழுத்தபோது, ''சொல்லுங்கோ காசு வேணுமெண்டால் இப்பவும் திருப்பித்தாறன். இப்பத்தை றேற் நாலு... உங்களிட்ட அப்ப வாங்கினதால...'' என்றான் ஏஜண்டுக்காரன்.

''அதுக்கில்லைத் தம்பி... நீர் கெதியில் மோனை அனுப்பிவிடும்.''

'நல்ல காலம், ஒரு ஐம்பது லாபம்' என இரத்தினத் தார் எண்ணித் திருப்திப்பட்டுக் கொண்டார்.

ஏஜண்டு சொன்ன பத்துக்கள் அழிந்து பதினாறாவது நாளும் பிறந்துவிட்டது. கூடப்படித்த பாவி அடிவயிற்றில் புளியைக் கரைக்க வைத்துவிட்டான். கரி நாக்கன்.

ஏஜண்டுப் பொடியன் எவ்வளவு நல்ல பையன். ஏமாற்றுபவன் மாதிரியே இல்லை. லொட்ஜ்காரரே அவனைப்பற்றிப் புழுகுவார்.

''எத்தனைபேரை இங்கிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கிறான், ராஜன்! சுழிவு நெளிவுகள் தெரிந்

தவன். எங்கை கொண்டுபோய் எங்கை இறக்கிறது என்பது அவனுக்குத் தெரியும்.''

ஏஜண்டுப் பையன் ராஜன் எவரையும் ஏமாற்றினதாக இங்கு அவர் அறியவில்லை.

''என்னப்பா, ஒருமாதிரி இருக்கிறியள்? ஆராவது வெருட்டிப்போட்டாங்களே?'' என்றபடி தவமணி கலக்கத்துடன் கணவனைப் பார்த்தாள். அடிக்கடி இரத்தினத்தார் இப்படி வந்து பேயறைந்தவர் போல இருப்பார்.

''கடையையும் பூட்டிப்போட்டு குமர்ப்பிள்ளைகளையும் ஊரில விட்டுவிட்டு வந்து இப்படி இங்க தூங்க வேண்டிக் கிடக்குது. ஒரு நாளைக்கு லொஜ்சுக்கு மட்டும் நானூறு ரூபா... சாப்பாடு.... உவன் வசந்தனுக்கு மட்டும் நாலைந்து சோடா...''

''பிள்ளைதானே, குடிக்கட்டுமேன். கெலியில கிடந்தவன். பாவம் நாங்களும் குடிக்கிறம்தானே? அங்க பிள்ளையள்தான் பாவம், அதுகளைத் தனிய விட்டிட்டு...''

''அவன் இப்ப எங்கை?''

''சந்திக்குப் போயிட்டு வாறன் எண்டவன்...''

''சும்மா அவனை வெளியில அனுப்பாதை தவம், அனுபவமில்லாதவன். றோட்டுக்கு றோட்டு இளம் பெடியளையும், பொடிச்சிகளையும் பிடித்து அள்ளிக்கொண்டு போறான்கள். வெளியில எடுக்க ஐந்நூறு தேவை. அவனுக்கு எத்தனை தடவை சொல்லிப்போட்டன்.''

''சிறை மாதிரி லொச்சில் அடைஞ்சு கிடக்கிறது என்றால்...''

தலையைத் துவாயால் துவட்டியபடி ஒரு இளம்பெண் அறைக்குள் வந்தாள். இரத்தினத்தார் எழுந்து வெளியில் வரமுயன்றார்.

"நீங்கள் இருந்து கதையுங்கோ அண்ணை" என்றாள் அவள்.

"இவ புஸ்பா சுதுமலை! புரியன் டுபாயிலையாம். பேசிப்போட்டு போக வந்தவ. நேற்றுப் பின்னேரம்தான் வந்தது."

இரத்தினத்தார் அவளை ஏறிட்டுப்பார்த்தார். கலியாணமான பெண்மாதிரித் தெரியவில்லை. அடர்ந்த கூந்தலும், வட்டமான சிவந்த முகமும் அவளுக்குத் தனிச் சோபையைக் கொடுத்தன. சற்றுப்பருமனான நடுத்தர உயரமான தோற்றம்.

"பிள்ளை சுதுமலையோ? எந்தப்பகுதி?"

அவள் அதற்கு எதுவும் பேசவில்லை. அந்தக்கேள்வி அவளுக்குப் பிடிக்கவில்லைப் போலப்பட்டது.

"சுதுமலைதான்" என்றாள்.

"யாரோடை கொழும்புக்கு வந்தனீர்? தனியவோ?"

"பக்கத்து வீட்டுத் தம்பியோட வந்தனான். அவர் இங்க ஒரு ஒபிசில வேலை செய்கிறார். இப்ப வருவார். போய் போன் எடுக்கப்போறம்."

"இங்கேயே லொச்சில் போன் எடுக்கலாம்."

"இங்க றேற் கூடவாம். வெளியில தம்பிக்குத் தெரிந்த இடமிருக்குது. அங்கபோய் எடுக்கப்போறம்."

அவள் தலையை வாரத் தொடங்கினாள்.

இரத்தினத்தார் மனைவி மீது பார்வையைப் பதித்தார்.

'அழிஞ்சமுதல்' - பார்வையின் அர்த்தம்.

* * *

# 2

"யாழ்ப்பாணத்தின் சகல பிரச்சினைகளையும் இந்த லொச்சில ஒண்டாக்காணலாம்'' என்று பாலசுப்பிரமணியம் கூறிக்கொண்டிருக்கும்போது பரமலிங்கம் புஷ்பாவை அழைத்துப்போக வந்திருந்தான். போர்டிக்கோக் குந்தில் அமர்ந்திருந்த பாலசுப்பிரமணியம் அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

அவனது தயக்கத்திலிருந்து அவன் இந்த லொட்ஜ்சுக் குரியவனல்லன் என்பது தெரிகிறது.

லொட்ஜ் கலகலப்பாகவிருந்தது. பல்வேறு கோலங்களில் பலர் நடமாடிக்கொண்டிருந்தனர். லொட்ஜின் ஐந்து தொலைபேசிகளும் இயங்கத் தொடங்கிவிட்டன. இனி நள்ளிரவுவரை அவை ஓயா. உறவுகளில் நனைவோரால் அவை விழித்திருக்கப்போகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதற்கு மூன்று நாட்கள் வரை எடுக்கும்போது, உலகெங்கும் சிதறிக்கொண்டிருக்கும் கொட்டிக்கிடக்கும் உறவுகளோடு தொடர்புகொள்ள மூன்று நிமிடங்கள் போதும். நேரக்கழிவு தெரியாமல் பேசிக்கொண்டிருக்கும்போது, இங்கு காசு கரைந்து கொண்டிருக்கும். பேசி முடிந்ததும் இன்னமும் சிறிது வேளை பேசியிருக்கலாமென்ற ஆதங்கம் ஏற்படும்போது, மூன்றிலக்கத்தில் பில் நீட்டப்படும். 'இவ்வளவா?' என மனம் சிலிர்த்துக் கொள்ளும்.

''கொஞ்சநேரம் தானே பேசினனான். நானூற்றியிருபது என்கிறியள்?''

லொட்ஜ்காரன் சிரிப்பான்.

காசைக் கொடுத்துவிட்டுத் தலைகனத்துச் செல்வார்கள்.

பரமலிங்கம் தயங்கி நின்று அங்குமிங்கும் பார்த்த போது, பாலசுப்பிரமணியம் கேட்டார்.

''தம்பி ஆரைத் தேடுகிறீர்?''

''அக்காவை... எட்டரைக்கு சரியா வாறதென்றவ.''

''இப்ப எட்டிருபதுதானே? இப்படி இரும், வெளிக் கிட்டு வருவா.''

அவன் அவர் அருகில் அமர்ந்து கொண்டான். நெற்றி ஏனோ வியர்த்துக் கொட்டியது. கைக்குட்டையை எடுத்து நெற்றியை ஒத்திக்கொண்டான்.

'' தம்பி யாழ்ப்பாணத்தில் எவ்விடம்?''

'' சுதுமலை...''

''அண்ணாமலைப் பரியாரியார் வீட்டுக்குக் கிட் டவோ?''

''அதுக்கு அங்கால...''

'' ஆ... இவ சொந்த அக்காவோ?''

''இல்லை... தூரத்தில ஒன்றுவிட்ட அக்கா. பக்கத்து வீடு.''

'' ஏன் கொழும்புக்கு வந்தனீங்கள்?''

அவனுக்கு அவரின் ஊர் விசாரணை எரிச்சலைத் தந்தது. 'பக்கத்து வீட்டில யார் இருக்கினம் என்பதே தெரியாத கொழும்புக்கு வந்தும் இவர்கள் ஊர் வியாக்கி யானத்தை இன்னமும் விடவில்லை?' என எண்ணிக் கொண்டான்.

"நான் கொழும்பில வேலை செய்யிறன். அக்கா ஹஸ்பெண்டோட கதைக்க வந்தவ."

"அப்ப தம்பி கலியாணம் செய்திட்டீரோ?" என்று கேட்டு வைத்தார்.

புஷ்பா வருவதைக் கண்ட அவன் அவரின் கேள்வியை அலட்சியம் செய்துவிட்டு டக்கென்று எழுந்தான்.

புஷ்பா அவன் எதிரில் வந்து நின்றாள். பின்னிய கூந்தலும், நெற்றிப்பொட்டும், அழகாக அணிந்திருந்த சேலையும் அவளின் நிறப்பொலிவுக்கு எடுப்பாக இருந் தன. பாலசுப்பிரமணியம் அவளைக் கண்கொட்டாது ஒரு கணம் பார்த்தார்.

"அக்கா என்றீர், தங்கச்சி மாதிரியல்லோ தெரியுது" என்றார். அவர் கூறியதை அவர்கள் கவனிக்கவில்லை.

"லிங்கம் கனநேரமே வந்து?"

"இப்பதான் வந்தனான்."

"போவமே? முதலில அவரோட கதைக்கவேணும்."

"சரி... இப்ப எட்டரை. அப்ப டுபாயிலை நேரம் அதிகாலை மூன்று மணியாக இருக்கும். நல்ல நித்திரை யாக இருப்பார். ஒரு ஒன்பதரைபோல போன் எடுப்பம்."

"ம்... சரி..."

அவர்கள் கேற்றைவிட்டு வெளியேறுவதை ஒருவித கவலையோடு பாலசுப்பிரமணியம் நோக்கிவிட்டுப் பெரு மூச்சு விட்டார்.

"நீங்கள் சாறியில நல்ல வடிவாக இருக்கிறியள்."

''ம்..'' என்றாள் புஷ்பா. இப்படித்தான் அம்மன் கோயில் தேர்த்திருவிழாவின் போது மூன்றாண்டுகளுக்கு முன் துரைரத்தினம் அவளிடம் கூறினான். அவளோடு கூடப்படித்தவன். முதன்முதல் அவள் சேலை அணிந்த போது அவன் கேட்ட பரவச வார்த்தைகள் அவை. அதன்பின் அவர்களிடையே நெருக்கம் கூடி, கலியாணத்தில் முடிந்தது. மூன்றாம் மாதமே டுபாய்க்குப் போனான். கடிதங்கள் ஏக்கங்களையும் விரகதாபங்களையும் சுமந்து வந்தன; போயின.

இப்போது ஆறு மாதங்களாக அவனிடமிருந்து எதுவித தகவலுமில்லை.

''சும்மா கவலைப்படாதை புஷ்பா. யாழ்ப்பாண நிலைமையில கடிதங்கள் வருமே? எழுதாமல் காசு அனுப்பாமல் இருக்கிறாரோ? கொழும்பில வெளிநாட்டுக் கடிதங்களைக் கிழித்துக் காசுகளை எடுக்கிறான்களாம். அப்படி ஏதாவது நடந்திருக்கும்'' என்று அம்மா ஆறுதல் கூறினார்.

மூன்று மாதக் குடும்ப வாழ்க்கையின் தாபத்தை அவனது கடிதங்கள் வந்திருந்தால் தீர்த்துவைத்திருக்கும்.

''என்ன அக்கா, யோசனை?''

'' ஒன்றுமில்லை''...

'' கொழும்பில காவ்ஸ்கேட், பிளவுஸ்தான் பாசன். பயணம்செய்ய எல்லாத்துக்கும் வசதி. நீங்க காவ்ஸ்கேட் போட்டால் சின்னப்பிள்ளை மாதிரித் தெரிவியள்.''

'' எனக்கு இப்ப இருபத்தெட்டு வயது.''

'' எனக்கு இருபத்தாறு'' என்றான் அவன்.

''என்றாலும் நீங்கள் என்னிலும் இளமையாகத் தெரியிறியள்.''

அவர்கள் கோல்பேஸ் வீதியில் ஏறினர்.

வீதியில் நவீன கார்கள் இடைவெளியின்றி நகர்ந்து கொண்டிருந்தன. பஸ்களும் மினிவான்களும் பிரயாணி களால் முட்டிவழிந்தன.

அவள் வீதியை ஆர்வத்துடன் பார்த்தாள். விருத் தெரிந்தபோது அவள் இன்றுதான் கொழும்புக்கு வந்திருக் கிறாள். மக்கள் அவசரம் அவசரமாக நடைபாதைகளில் விரைந்துகொண்டிருந்தனர். எதிரில் வருபவர் யார் எவர் என்று நிதானித்துப் பார்க்கும் ஆர்வம் இல்லை. கொழும்பு யந்திரமாக இயங்கிக்கொண்டிருந்தது.

''சூ... எத்தனை காருகள்?'' என்று புஷ்பா வியப்பைக் காட்டினாள்.

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்துச் சிரித்தான்.

''கொழும்பைச் சுற்றி ஆறுதலாகப் பார்ப்போம்.''

''முதலில அவரோடை பேசவேணும்...'' என்றாள் புஷ்பா ஏக்கத்துடன்.

''நேரமிருக்குது... காலைச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுப் பேசுவமே?''

''பிறகு சாப்பிடுவம் லிங்கம்.''

''அப்ப ஒரு ரீயாவது குடிப்பம்.''

''சரி'' என்றாள் புஷ்பா. அவள் மனம் துரைரத்தி னத்தோடு பேசுவதில் ஆர்வமாக இருந்தது. எவ்வளவு இனிமையான வாழ்க்கை? அவன் கடிதம் எழுதாமைக்குக்

காரணம் அதுவாகத்தான் இருக்குமோ? மாசிலாமணி தப்பாகத்தான் எழுதியிருப்பான். போனில் கதைக்கும் போது அவரிடம் கேட்டுவிட வேணும்.

அவளைப் பரமலிங்கம் ஆனந்தபவனுக்கு அழைத்துச் சென்றான். ஒரு மேசையில் எதிரெதிரே அமர்ந்து கொண்டனர். அவள் கரங்கள் மேசையில் படிந்திருந்தன. தங்க வளையல் ஒரு சோடி அவள் பொன்னிறத்தில் மங்கித் தெரிந்தது, கழுத்தில் மெல்லிய சிங்கப்பூர் செயின் உருண்டு நெளிந்தது.

''அம்மா தாலிக்கொடி போட வேணாம் என்றவ... கொழும்பில் பயமாம்'' என்றாள் புஷ்பா.

'இவ்வளவு அழகு மனைவியை இங்க விட்டிட்டு அங்க போய் என்னத்தை உழைக்கிறான்? கடந்த காலம் திரும்பவா போகிறது?' எனப் பரமலிங்கம் எண்ணிப் பெருமூச் செறிந்தான்.

''என்ன யோசனை லிங்கம்?''

''ஒண்டுமில்லை.''

அவர்கள் தேனீர் அருந்தினர். புஷ்பா பில்லிற்குப் பணம் கொடுக்க முயன்றபோது பரமலிங்கம் முந்திக் கொண்டான்.

''நீர் செலவழிக்க வேண்டாம், லிங்கம்.''

''நான் உழைக்கிறன்.''

''எண்டாலும்...''

''எல்லாத்தையும் கணக்குப் பார்த்து பிறகு ஒண்டாத் தாங்கோ!'' என்று அவன் சிரித்தான்: ''இப்ப கொழும்பில

லொச் வைச்சிருக்கிறதும், தொலைபேசி தொடர்பாடல் வைத்திருப்பதும் நல்ல இலாபம். வீதிக்கு வீதி யாழ்ப் பாணத்தாக்களை நம்பி இரண்டுமிருக்கிறது. ரெலிபோன், ரெலெக்ஸ், பாக்ஸ், அத்தோடு போட்டோஸ்டேட், ரைப்பிங் .. ஒரே உழைப்புத்தான்.''

அவர்கள் வீதியோரமாக இருந்த படிகளில் ஏறி மாடிக்கு வந்தனர். ஒடுங்கிய அறை. கண்ணாடியால் தடுக்கப்பட்ட ஐந்தாறு ரெலிபோன் கூண்டுகள். அவற்றின் கதவுகளை மூடிவிட்டு ரெலிபோன்களில் கண்ணீர் விட்டுக்கொண் டிருந்தனர்.

பரமலிங்கம் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து 'டுபாய்' என்றான். ரிசப்சன் மேசையில் அமர்ந்திருந்த ஒருவன் அதனைக் குறித்துக் கொண்டான்.

''அப்படி இருங்கோ...'' —கதிரையில் அமர்ந்து கொண்டனர்.

புஷ்பாவின் நெஞ்சு படபடத்தது. அவர் பேசப் போகிறார். "ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு நேரில் பேசப்போகிறார். என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? அவரின் குரலைக் கேட்டதும் அவள் நெகிழ்ந்து போய் விடுவாள். விம்மலும் வெடிப்புமாக பேசமுடியாது போய் விடலாம்.

தொலைபேசி மணி அடித்தது.

''மூன்றாவது அறைக்கு...'' என்றான் மேசையிலிருந் தவன்: '' மூன்றாவது பூத் கூண்டுக்குப் போய்க் கதவைச் சாத்திக்கொண்டு பேசுங்கோ...''

புஷ்பா படபடப்புடன் கூண்டுக்குள் நுழைந்தாள். ரிசீவரைக் கையில் எடுக்கும்போது நெஞ்சு படபடத்தது. கரம் நடுங்கியது.

"ஹலோ..."

"ஹலோ யாரு பேசுறது?"

"அது நான் .. புஷ்பா... உங்க புஷ்பா .."

"புஷ்பாவா?... யாரோடை பேசவேணும் நீங்க?..."

அவளுக்கு தன் தவறு புரிந்தது.

"துரைரத்தினத்தோட பேசணும். நான் அவற்றை வைஃவ் புஷ்பா"

"அவர் இன்னமும் நைற் டியூட்டியால வரவில்லை. நீங்க உங்கட போன் நம்பரைத் தாருங்கோ, வந்ததும் பேசச்சொல்லுறன்."

"பொறுங்கோ..." அவள் பரமலிங்கத்தைச் சைகை காட்டிக்கூப்பிட்டாள். அவன் எழுந்து சென்று கண்ணாடிக் கதவைத் திறந்தான்.

"போன் நம்பர் வேணுமாம். அவர் இன்னமும் வேலையால வரவில்லையாம்."

"நீங்க பேசுற போன் நம்பர் அதில எழுதியிருக்குது. அதைக் கொடுங்கோ. இலங்கை நேரத்துக்கு மாலை 6 மணிக்குப் பேசச் சொல்லுங்கோ..."

அவள் அப்படியே கூறினாள். வெளியில் வரும்போது அவள் வியர்வையில் நனைந்திருந்தாள். இருநூற்றிப் பத்து ரூபாவைக் கட்டிவிட்டுத் திரும்பும்போது அவள் கூறினாள் :

"அவர் எவ்வளவு கஷ்டப்படுகிறார்? இரவிலும் வேலையாம். பாவம்..."

"ஏன் இப்படிக் கஷ்டப்படவேணும்? இங்க கூலி வேலை செய்துகொண்டு மனைவியோட வாழ்ந்திருக்க லாமே?"

அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"அவருக்குக் கலியாணமாகாத ரெண்டு தங்கச்சி மார் இருக்கினம்."

"எங்கை போவம்...?"

"லொச்சுக்கு ஆறு மணிக்குத்தானே போனவரும்? நீர் இண்டைக்கு வேலைக்குப் போகவில்லையா?"

"இல்லை... உங்களுக்குக் கொழும்பைச் சுத்திக் காட்டப்போறன்."

"வேணாம் லிங்கம், இன்னொரு நாளைக்குப் பார்ப்பம். அவரோடு பேசாமல் எனக்கு எதுவும் ஓடாது. நீர் என்னை லொச்சில் விட்டிட்டு வேலைக்குப் போம். பின்னேரம் வாரும்."

அவன் ஏமாற்றத்துடன் அவளைப் பார்த்தான்.

"சரி... நான் ஒரு வீட்டில தனியறை எடுத்திருக் கிறன்; சிங்கள ஆக்கள். இப்படி அக்கா வந்திருக்கிறா, லொச்சில இருக்கிறா என்றன் ஏன்; அங்கை விட்டனீர்? இங்க கூட்டி வந்திருக்கலாமே என்றினம் "

"நல்ல ஆக்கள்..." எனப் புஷ்பா புன்னகைத்தாள்.

* * *

# 3

"அவரோடை பறைஞ்சிட்டியளே, அக்கா?'' என்று சசிகலா, புஷ்பாவைக் கேட்டாள். புஷ்பா லொட்ஜ் அறைக்குத் திரும்பியபோது அறையில் சசிகலா மட்டுமே இருந்தாள். ஏனையோர் வெளியில் சென்றிருந்தனர். காற்றோட்டம் குறைவான அந்த அறைக்குள் இருப்ப தற்கு அசாத்திய ஆரோக்கியம் தேவை. சீலிங்பான் ஒன்று தனது ஆற்றாமையை வெளிப்படுத்திக்கொண்டு கடகடக் கிறது. நான்கு கட்டில்களும் மூலைக்கு மூலை பயணப் பொதிகளும் குவிந்து கிடக்கின்றன.

முதல்நாள் இந்த அறைக்குள் வந்தபோது ஏற்கனவே இரு குடும்பங்கள் இடத்தைப் பிடித்திருந்தன. இரத்தி னத்தார் குடும்பத்தில் மூவர், சசிகலா குடும்பத்தில் மூவர். ஆண்களோடுதான் இந்த அறையில் உறங்க நேரிடுமோ என்று எண்ணியபோது, இரவு ஆண்கள் விறாந் தைப் பாய்களுக்குப் போய்விட்டார்கள்.

''என்ன கேட்டீர்?'' என்று புஷ்பா சசிகலாவைத் திருப்பிக் கேட்டாள்.

''அவரோட பறைஞ்சிட்டியளா?'' என்றாள்.

''இல்லை. அவரில்லை. ரெலிபோன் நம்பர் கொடுத் திருக்கிறன், கதைப்பார்.''

அவள் தனது கட்டிலில் அமர்ந்துகொண்டாள். சசி கலாவை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு மாதத்திற்கு மேலாக அவளும், தாயும், தமையனும் இங்கு காத்திருக்கிறார் கள். சசிகலாவுக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது.

மணமகன் கனடாவில் இருக்கிறான். ஒருவரையொருவர் நேரில் பார்த்தது கிடையாது. ஊரில் பொன்னுருக்கி, கன்னிக்கால் நட்டு, தாலியையும் கொடியையும் கையில் எடுத்துக்கொண்டு விமானமேற வந்திருக்கிறாள்.

யாழ்ப்பாணத் திருமணங்கள் இன்று எப்படியெல்லாம் மாறிவிட்டன. பாரம்பரியப் பெருமைகள், விழுமியங்கள் எல்லாம் காலத்தேவைக்கு ஏற்ப மாறிவிட்டன. இங்கிருந்து மணப்பெண்களை அனுப்பி வைத்துவிட்டு, வீடியோவை எதிர்பார்த்துப் பெற்றார் காத்திருக்கிறார்கள். தாங்கள் இருந்து செய்து கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டிய புனிதச் சடங்குகளுக்குத் தூரத்து உறவுகள் செய்து கொடுப்பதைக்கண்டு உள்ளங்கள் உருகவேண்டியுள்ளது. நெஞ்சில் முள் இன்றி வலி பரவுகிறது.

ஒருநாள் பழக்கத்திலேயே புஷ்பாவும் சசிகலாவும் சிநேகிதமாகிவிட்டனர்.

''எப்ப உம்முடைய 'பிளைற்'?''

''இரண்டு மூன்று நாளில் என்று ஏஜண்ட் சொல்கிறார். ஒரு மாதமா இதைத்தான் சொல்லிவாறான் ''

''நேரடியாகவே விசா எடுத்துப் போறீரோ?''

இதனைக்கேட்டு சசிகலா கொல்லென நகைத்தாள்.

புஷ்பா வியப்போடு பார்க்க,

''என்ன அக்கா உலகம் தெரியாமல்... முகம் மாற்றித்தான்'' என்றாள்.

உண்மையில் புஷ்பாவிற்கு எதுவும் புரியவில்லை.

மூன்று நாட்களுக்கு முன் ராஜன் ஏஜண்ட் லொட்ச்சிற்கு வந்தான். அவர்களுடைய அறைக்கு நேரே வந்து

எல்லாரையும் வெளியனுப்பிவிட்டுச் சசிகலா, தாயார், அண்ணன் மூவரையும் இருத்தி வைத்து, அனுப்பும் திட்டத்தை விளங்கப்படுத்தினான்.

''இப்ப எல்லாம் சரி. சசிகலாவுக்கு ஏற்றமாதிரி ஒரு மலேசியாப் பாஸ்போர்ட் கிடைச்சிருக்கு. இப்ப இங்க கதைக்கிறதை வெளியில எவருக்கும் சொல்லக்கூடாது. இந்தப் பாஸ்போர்ட்டிற்கு மாத்திரம் ஐம்பது செலவு. பாத்துக்கொள்ளுங்கோ.'' அவன் பாஸ்போர்ட்டை விரித்துக் காட்டினான். அதில் ஒரு மலேசியப் பெண் இறுக்கமான முகத்துடன் தெரிந்தாள்.

''இதைக் கழற்றிவிட்டு சசிகலாவின்படத்தைப் பொருத்துவம். சசிகலாவின் நிறம், உயரம், கண் நிறம், தலைமயிர் நிறம் எல்லாம் அச்சொட்டாகப் பாஸ்போர்ட்டில் உள்ளபடியுள்ளது.''

''பிடிபட்டால்...?'' என்று அண்ணன் சுகிர்தன் கவலையோடு கேட்டான்.

''அது ஆயிரத்தில் ஒண்டு, பயப்படத் தேவையில்லை. இந்தப்பெண் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு விசாவில் வந்ததாக பாஸ்போர்டில் இருக்குது. இங்கிருந்து சிங்கப்பூர் சென்று, அடுத்த பிளைற்றில் கனடா செல்வதற்கு விசா இருக்கிறது. உங்கடை பெயர் இனி சசிகலா அல்ல. மிஸ் ஜி. ஞாமோஸ். மறக்கக்கூடாது. இதில இருக்கிற மாதிரி கையெழுத்து வைக்கப் பழகுங்க... சிங்கப்பூரில பிடிபட்டால் உசாராகக் கதைக்க வேணும். சலன்ஜ் பண்ணணும் ..''

சசிகலாவுக்குப் பயமாகவிருந்தது. அவளால் முடியுமா? கனடாவுக்கு எப்படியாவது சென்றே ஆகவேணும். கலியாணத்துக்கு முற்றாகிவிட்ட கணவரை சென்று அடைந்தே

தீர வேண்டும். இந்த ஒரு மாதத்தில் எத்தனை தடவை அவரோடு போனில் பேசிவிட்டாள்? அடிக்கடி அவனும் அவளைப் போனில் கூப்பிட்டுப் பேசிக் கொள்கின்றான்.

''சசி......சசி...''

''ம்...''

''எப்ப இங்க வரப்போகிறீர்? உம்முடைய படத்தைப் பார்த்துப் பார்த்துத் தவிக்கிறன். இப்படி ஒருபோதும் நான் ஏங்கித் தவித்தது கிடையாது. என்ன பேசமாட்டன் என்கிறீர்...''

''பேசுறன் தானே?''

''சசி... என்சசி...'' என்பான் அவன். அவனது காதல் கசியும் வார்த்தைகளில் அவள் வசப்பட்டு நிற்பாள். எப்படியும் கனடா போயே தீரவேண்டும். அவளுக்கென நிர்ணயிக்கப்பட்ட வாழ்வு அங்குதான் காத்திருக்கின்றது.

சசிகலாவின் விழிகள் கனவுகளில் ஆழ்ந்தன.

''என்ன சசி, கடும் யோசனை?''

''ஒண்டுமில்லை அக்கா.''

இரு பெண்களும் சிரித்துக்கொண்டனர்.

''நீங்களும் அங்க அவரோட போறதுதானே?'' என்று இருந்தாற்போல சசிகலா வினாவினாள்.

''டுபாய்க்குப் போக முடியாதாம்.''

''எவ்வளவு காலம் அவர் அங்குபோய்?''

''ஒன்றரை வருஷமாகுது: கலியாணமாகி மூன்றாம் மாதம் போனவர்.'' நீண்ட பெருமூச்சு ஒன்று கிளம்பியது.

''பாவம் அக்கா, நீங்கள்...''

''நீருந்தான்...''

சசிகலாவின் தாயார் உள்ளே வந்தாள். தனது கரத்திலிருந்த சொப்பிங் பைகளை கட்டிலில் வைத்தாள். அப்பிள் பழங்கள்.

''கொழும்பில சாமான்கள் நல்ல மலிவு, வீடொன்று மட்டுமிருந்தால் கொஞ்சக் காசில சீவிக்கலாம்'' என்றாள் சரஸ்வதி, ''முந்தநாள்தான் வந்த பிள்ளை. இண்டைக்கு பிளைற்றாம். யாழ்ப்பாணத்திலேயிருந்து வந்த களைப்புக் கூட மாறவில்லை. அதுக்குள்ள மாப்பிள்ளையிட்ட போகப் போகுது.''

''ஆர் அம்மா?''

''நாலாவது அறையில் இருக்கினமே. ராஜி அந்தப் பிள்ளை. அவை யாரோ வேறை ஏஜன்டிட்டை காசு கட்டினவையாம். சுவிசுக்குப் போகுது. நாங்க வந்து ஒரு மாதமாகுது. ஒரு வழியையும் காணவில்லை.''

சசிகலாவுக்கு நம்ப முடியாதிருக்கிறது. பயணமும் அதிர்ஷ்டத்தைப் பொறுத்ததோ?

''சுவிசுக்குக் கெதியில போகலாம் போல'' என்று புஷ்பா ஆறுதல் கூறினாள்.

''சுவிஸ் மாப்பிள்ளைக்கு யாரும் குடுப்பினமோ?''

''ஏன்?''

''சுவீஸ்சில இருக்கிறவையளை எல்லாம் கவுண்மேந்து திருப்பியனுப்பி வைக்கப் போகுதாம். அதுதான் நாங்கள் கொஞ்சம் சீதனம் கூட என்டாலும் கனடா மாப்பிள்ளை எடுத்தனாங்கள். கனடா ஒரு குட்டி யாழ்ப்பாணம் மாதிரி. யாழ்ப்பாணத்திலிருந்து போனவையில முக்கால் வாசிப்பேர் அங்க தானே?'' என்றபடி ஏதோ அலுவலாக சரஸ்வதி எழுந்து வெளியே போனாள்.

புஷ்பா, சசிகலாவைப் பார்த்தாள்.

''யாழ்ப்பாணத்தில இண்டைக்குக் கிழடுகளும், குமருகளுந்தான் மிச்சம்... இன்னும் கொஞ்சக்காலம் போனா கிழடுகள் மட்டுந்தான் மிஞ்சும். குமருகளும் மணவாழ்க்கை தேடி வெளிநாடுகளுக்கு ஓடிக்கொண் டிருக்கினம்.''

''வேறைவழி அக்கா... யாழ்ப்பாணத்தில கலியாணத் திற்கு தோதான இளைஞர்களில்லை. ஒரு காலகட்ட இளைஞர்கள் ஒன்றில் வெளிநாட்டிலுள்ளனர். அல்லது இயக்கத்திலுள்ளனர்.''

''வெளிநாட்டிலுள்ளவர்கள் இங்கு வரலாமே!''

''அது எப்படிச் சாத்தியம் அக்கா? எங்கட ஊருகளில சனம் பஞ்சம் பசியில்லாமல், இத்தனை பிரச்சினைகளுக் குமிடையில் ஓரளவு வாழ்கின்றதென்றால் அதுக்கு வெளி நாட்டுக்காசு தான் காரணம். யாழ்ப்பாணத்திலிருந்து பயணக்கஸ்ரப்பட்டு கொழும்புக்கு இவ்வளவு பணம் செல வழித்து வந்து, பிள்ளைகளோடை அல்லது புரிசன்மா ரோடை பேசி, பணம் பெற்றுச் செல்வதால்தான் யாழ்ப் பாணம் இயங்குதுபோல எனக்குப்படுகின்றது. எங்கட திருநெல்வேலி வீடு பொம்பர் குண்டால் முற்றாக அழிஞ் சுது. நாங்க தேடியிருந்த சொத்துக்கள் எல்லாம் கணப் பொழுதில் அழிந்து போச்சுது. ஆனால் வெளிநாட்டில் அண்ணன் ஒருவன் இருப்பதால் தப்பி நிற்கிறம். 'உழி

ரோடை இருக்கிறியளே அதுவே போதும், நான் உழைச்சு அனுப்புவன்'' என்று ஆறுதல் கூறும் அண்ணன் தான், இன்டைக்கும் என்னைக் கனடாவுக்கு அனுப்புறதும் அதே அண்ணன்தான்...''

''யாழ்ப்பாணத்தில எத்தனை பேர் வெளிநாட்டுப் பணத்தை தண்ணியாகச் செலவழிக்கினம். கொழும்பில் நிண்டு கொண்டு எப்படி எப்படியெல்லாம் செலவழிக்கினம்...''

''மெய்தான் அக்கா...'' என்று சிரித்தாள் சசிகலா. ''ஒன்று சொல்லுவன் கோபிக்க மாட்டியளே? அக்கா... நீங்க நல்ல வடிவு, உங்களை இங்கு விட்டிட்டு அங்க போய் இருக்கிறாரே?'' என்று அவள் மீண்டும் சிரித்தாள்.

புஷ்பாவை கவலை சூழ்ந்து கொண்டது. மூன்று மாதகால திருமணபந்தம். வாழ்ந்து முடிக்க வேண்டிய காலம் வீணே போகின்றது. மீண்டு வராத இளமை ஒவ்வொரு நாளின் பிறப்போடும் கழிந்துகொண்டிருக்கின்றது. கொந்தளிக்கும் உணர்வுகளை ஜடமாக அடக்கிக் கொண்டு... எவ்வளவு காலம்? உணர்வுகள் எரிமலையாகக் கொந்தளிக்கின்றன. கக்குகை எப்போது? நுரை கக்கிப் பொங்கி வழியவிருக்கும் பாலை நீர் தெளித்து அமைதிப்படுத்த எவருமில்லை.

'இந்தநிலை மிகக் கொடுமையானது' என புஷ்பா இன்று உணர்கிறாள். 'ஏன் அந்த மனிசன் புரிந்துகொள்ளவில்லை? மாசிலாமணி எழுதியது போல அவருக்கு அங்கு வடிகால் இருக்கின்றதோ?'

''சசிகலா போன்கோல் '' என்று எவரோ கீழிருந்து குரல் கொடுத்தனர். அவள் 'டக்'கென விரைவாக எழுந்தாள். 'அவர் ' என்று முகமெல்லாம் மலரக் கூறி விட்டு, துள்ளி ஓடுவதைப் புஷ்பா பார்த்தபடி நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

நெஞ்சு கனத்தது.

* * *

# 4

கூந்தில் அமர்ந்திருந்த பாலசுப்பிரமணியம் தன்னருகில் அமர்ந்திருக்கும் பரமசிவத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

''என்ன கேட்டீர்?''

''உந்தப் பேச்சுவார்த்தை சரி வருமோ என்று கேட்டனான்.''

''பதினேழு வருடமாக நாங்க படுகிற கஷ்டம் போதாதே. நான் நினைக்கிறன். புதிய சந்திரிகா அரசு பொடியளோடு ஒரு சமாதானத்திற்கு நிச்சயம் வரும் என்று. இங்கால பொருளாதாரத் தடையைத் தளர்த்த, அங்கால அரசியல் கைதிகளை விடுதலை செய்ய... சுமுகமான சூழ்நிலை காணப்படுகிது தானே?''

''உது சரிவராது கண்டியளோ? யுத்தம் தொடர்ந்து நடக்குது தானே? பொடியள் கப்பலை அடிக்க... இவங்கள் குடிமனைக்குள் புக... யுத்தம் ஓயாது... சமாதானம், சகயநிலைமை வராது...''

பரமசிவத்தை பாலசுப்பிரமணியம் ஊடுருவிப் பார்த்தார்.

''இருந்து பாரும். எதுக்கும் ஒரு முடிவு இருக்குது. ஒரு சமாதானம் வரத்தான் போகுது...''

''நிச்சயமாக வருமே?'' என்று பரமசிவம் பரிதாபமாகக் கேட்டார். அவர் கேள்வி பாலசுப்பிரமணியத்திற்கு வியப்பைத் தரவில்லை. பலர் இப்படித்தான் ஏக்கத்துடன் கேட்கிறார்கள். சுயநலத்தோடு கூடிய சிந்தனை அப்படிக் கேட்க வைக்கின்றது.

''வரும்'' என்றார் பாலசுப்பிரமணியம் திடமாக.

பரமசிவத்தின் முகத்தில் இனந்தெரியாக் கவலை இருட்புகாராகப் படர்ந்து கவிந்தது.

''ஒரு இரண்டு மூன்று வரியத்துக்கு வரக்கூடாது பாருங்கோ. என்ரை பொடி சுவிசுக்குப் போய் ஒரு வரியமுமாகவில்லை. காணி பூமிகளை வித்துக் கடன் பட்டுத்தான் அனுப்பினனான். அகதியாகத்தான் அங்க இருக்கிறான். இன்னமும் சிற்றிசன் கிடைக்கவில்லை. சமாதானம், சகயநிலை இங்க வந்திட்டால் எங்கையெண்டு திருப்பியனுப்பக் காத்திருக்கிறான்கள். நாங்கள் என்ன செய்யிறது?'' என்றார் பரிதாபமாக பரமசிவம்.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வருகின்ற தொலைபேசிகளில் பெரும்பாலும் ''நிலமை சீர்திருந்தி விடுமே? சமாதானம் வந்திடுமே? பொடியள் விட மாட்டார்கள். சிங்கள அரசு இப்படி எத்தனை தடவை செய்திருக்குது. உது சரிவராது'' என்ற தோறணையில் அமைவதை அவர் கவனித்திருக்கிறார். இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடுவது தடைப்படக்கூடாது என ஒரு சிலர் விரும்புகிறார்கள். நித்தம் அழிந்து கொண்டிருக்கின்ற பெறுமதியான உயிர்கள்... சொத்துக்கள்... மனித நிம்மதி... ஆசாபாசங்கள்: பயத்தோடும் விரக்தியோடும் வாழ்கின்ற மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு விட ஒரு ஒளிப் பொட்டுத் தெரியக்கூடாதா?

எல்லாம் சுயநலம்!

''பேச்சு வார்த்தை ஒருக்காலும் சரிவராது'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு பரமசிவம் எழுந்து செல்கிறார். ''இண்டைக்கு மோன் கோல் எடுப்பான்; இங்க தங்குறது வீண்காசு.''

''என்ன உலகம்?'' என்று கூறி பாலசுப்பிரமணியம் சிரித்துக் கொள்ளும் போது அவர் அருகில் வந்து இரத்தினத்தார் அமர்கிறார்.

''என்னடாப்பா சலித்துக் கொள்கிறாய்?''

''நம் தமிழ்ச்சமூகத்திற்கு தமிழ் சமூகந்தான் எதிரி கண்டியோ?''

''இந்த மண்ணிற்குச் சமாதானம் வருவதை எவனும் விரும்பான் போல இருக்குது. முதலில நம்மடை வியாபாரிகள் விரும்பமாட்டான்கள். அவங்கள் உழைக்கிற உழைப்பும் அடிக்கிற கொள்ளையும் கொஞ்சநஞ்சமல்ல. அடுத்து நம்மடை லொறிக்காரர் விரும்பமாட்டான்கள். கிளாலியிலிருந்து கொழும்புக்குச் சாமான் ஏற்றியிறக்க ஒரு லட்சம் ரூபா கூலி. அந்தக் காலத்திலே ஆயிரம் ரூபாவுக்கு ஏற்றியிறக்கினாங்கள். ஆமிக்காரர் விரும்ப மாட்டான்கள். இந்த வியாபாரிகளும் லொறிக்காரரும் அவங்களுக்குக் கொடுத்துக் கொடுத்து வைத்திருக்கிறான்கள்.''

''நீ சொல்லுறது சரி'' என்று இரத்தினத்தார் ஆமோதித்தார்.

''அடுத்து வெளிநாட்டில பிள்ளைகளை அனுப்பி விட்டு, இங்க சொகுசாக அவங்க அனுப்புற காசில சீவித்து ருசிகண்ட தாய் தகப்பன் மனிசிமார் சமாதானம் வாறதை விரும்பமாட்டார்கள்...''

''ஏன்? ஏன்? அப்படிச் சொல்கிறாய்? இங்க இருக்க முடியாமல் தானே அதுகள் வெளிநாடுகளுக்கு ஓடினதுகள்? அதுகள் யாழ்ப்பாணத்துக்கு எப்ப வருவம், தாம் பிறந்து வளர்ந்த மண்ணில எப்ப திரிவம் என்று ஏங்குதுகள்.''

''யாழ்ப்பாணத்தில பிறந்து அங்க போனதுகளுக்கு அந்த ஏக்கம் இருக்கும் தான். இல்லையெண்டில்லை. அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு அந்த தவிப்பு இருக்காது. அப்பிள்ளைகளுக்கு யாழ்ப்பாண மண்ணின் இனிமை தெரியாது. ஒரு 'லொஸ்ற் ஜெனரேசன்' இப்ப வெளிநாடுகளில் உருவாகுது. நேற்று ஒருத்தர் கனடாவில் இருக்கிற மகனோடு போனில பேசிக்கொண்டிருந்தார். பூத் கதவை நல்லாச் சாத்தாதாலே வெளியே குரல் கேட்டது ''

''என்னவாம்?''

''மகன் தன் பிள்ளைகளைப் பற்றி ஏதோ கூறியிருக்கிறான். இவர் ஆ, அப்படியே? துண்டாத் தமிழ் பேச மாட்டினமே? இங்கிலீஸ்தானே... நல்லாய் பேசுவாங்களா? நல்லது நல்லது. உன்ர மனிசியே பேரன்களோட இங்கிலீஸில பேச கஸ்டப்படுகிறாவோ? கிரான்பாவோட பேசப்போகினமோ? ஐயோ எனக்கு இங்கிலீஸ் தெரியாது... நான் அப்பப்பா .. அப்பப்பா நல்லாய் இருங்கோ. என்கிறார். தமிழ் பேச மாட்டினம் என்றதுக்கு நல்லது நல்லது என்கிறார். இப்படிப்போனா எங்கே போய் முடியுமோ? அதெல்லாம் சரி, இரத்தினத்தார், உன்ர பொடியன் வசந்தன் பயணத்திற்கு ஆயத்தமோ?''

பாலசுப்பிரமணியத்தாரிடம் வாய்கொடுக்க இரத்தினத்தாருக்குப் பயமாக இருந்தது. எதையாவது சொல்லி மனதைக் கலக்கிக் குழப்பிவிடும்.

'' உடுப்புகள் நிறையத் தைத்துவைச்சிருக்கிறான். சப்பாத்தும் வாங்கி இருக்கிறான். உதுகள் ஜேர்மனியில நல்ல விலையாம்.''

'' விதானையிட்டையும் ஏஜிஏயிட்டையும் கடிதம் வாங்கிட்டியே?''

"ஏன்?" என்று இரத்தினத்தார் கலக்கத்துடன் கேட்டார்.

"வெளிநாட்டுக்கு வெளிக்கிடும்போது இங்கு கலியாணம் செய்யாதவர் என்று ஒரு அத்தாட்சிக் கடிதம் தேவை; இருந்தால் நல்ல உதவியாக அங்க இருக்கும்..."

இரத்தினத்தார் இதைக் கேட்டுச் சிரித்தார்.

"பொடியன் அங்க கலியாணம் செய்யவே போகுது...? விசர்க்கதை பேசுறாய் பாலா, மூன்று குமருகள் இங்க இருக்குது, அதுகளின்ர காசில அவன் ஜேர்மனிக்குப் போகப்போறான்; இப்ப கலியாணக் கடிதம் .. அதொண்டும் தேவையில்லை, அது அந்தநேரம் வாங்கலாம்" என்று விருட்டென்று எழுந்து சென்றுவிட்டார்.

பாலசுப்பிரமணியம் மௌனமானார். லொஜ்சில் திருவிழாச் சனம் இன்னமும் குறையவில்லை. "ரிசப்சன்" மேசைமுன் வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புகளை எதிர்பார்த்துப் பலர் காத்திருந்தனர். சிலர் ஒடுங்கிய ரெலிபோன் பூத்துக்குள் நுழைந்து பேசிக்கொண்டிருந்தனர். கன்ரீன் முன் பொடியளும் பொடிச்சிகளும் கரங்களில் கோலா, பன்ரா, பெப்சி, போட்டோலோக்களை வைச்சு உறிஞ்சிக்கொண்டிருந்தனர்.

"எப்ப மச்சான் பிளைற்?"

"கெதியில..."

"போனதும் உன்ர ஆளையும் பொன்சர் பண்ணிக் கூப்பிடுவியோ?"

"மெதுவாகப் பேசடா... அம்மாவுக்கு கேட்டிடப் போகுது. கூப்பிடத்தானே வேணும்; அவ இல்லாமல் நான் என்ன செய்யிறது?"

''என்னையும் கூப்பிட்டா '' இருவர் நட்பாகப் பேசிக்கொள்கிறார்கள்.

'' என்னடி நோர்வேக்குப் போறியாம்!''

''ஓம்... எனக்குப் பிக்ஸ் பண்ணினவர் அங்கதான் இருக்கிறார்.''

'' மோகனோ?''

''நீ ஆரைக் கேக்கிறாய்?''

''என்னடி தெரியாதது மாதிரிக் கதைக்கிறாய்? ஊரில மோகனோட நீ பிரண்டாக இருந்தாய், ஒண்டாப் பேசித் திரிஞ்சியள்...''

'' அதைக் கதையாதையடி, அதுக்கு எங்கட அப்பா ஒத்துக்கொள்ளவில்லை, அதைக் கனவாக மறந்து போனன். மோகனுக்கு ஆமான வேலையுமில்லை; பொறுப்புகளும் கூட. அதுதான்...''

'' உவர் என்ன செய்யிறார்?''

''வெளிநாட்டில இருக்கிற யாராவது தாங்கள் என்ன வேலையெண்டு சொல்லுறவையே? அவருக்கு வீடு இருக்காம், கார் இருக்காம்; படமெல்லாம் அனுப்பியிருந்தார். கனகாலம் அங்க போய். பொன்சர் பண்ணித்தான் கூப்பிடுகிறார், கரைச்சலில்லை.''

பாலசுப்பிரமணியம் எழுந்து கன்ரீனுக்குப் போய், ஒரு பிளேன்ரீயை வாங்கி அருந்தத் தொடங்கினார். எல்லாரும் தெரிந்த முகங்கள்போலத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் பல்வேறு மூலைமுடுக்குகளிலும் வாழ்ந்தவர்கள் இங்கு குழுமியிருக்கிறார்கள்.

'' அம்மான், என்ன இங்கால...'' என்றபடி ஒருவன் அவர்முன் வந்து அமர்ந்தான்.

''தம்பி யார்...''

''நான்தான் கனகசபையற்றை இரண்டாவது மகன் ரவி.''

''நீதானே வாத்தி...''

''ஓமோம்...''

''இங்க...''

''லண்டனுக்குப் போகப்போறன்.''

''கலியாணம் செய்திட்டியே?''

''செய்யத்தான் அங்க போறன்.''

பாலசுப்பிரமணியம் கண்களை அகல விழித்து ஆச்சரியப்பட்டார். ''மணப்பெண்களைத்தான் இங்கிருந்து ஏற்றுமதி செய்யிறம் எண்டால், பையன்களையும் ஏற்றுமதி செய்யிறம்போலை.''

''ஓமோம், அம்மான் உங்களுக்குத் தெரியும் தானே. என்னட்டை படிச்சவ. எங்களுக்குள்ளே ஒரு நெருக்கம்.''

''காதல் என்று சொல்லு...''

''ஓம்.. ஓம்... அவ தாய் தேப்பனோட வசதியாக லண்டனில இருக்கினம்.''

''உம்மை மறக்கடிக்கத்தான் பொடிச்சிய லண்டனுக்குக் கூட்டிப் போனவையெண்டு கதை...''

''இப்ப என்னைக் கூப்பிடுகினம்...''

''பொடிச்சி உம்மைத் தவிர வேறை ஒருவனையும் கட்டமாட்டன் எண்டதாக்கும். எப்ப போறீர்...?''

" பத்தாம் திகதி பிளைற்..."

" நல்லது, நல்லா இருங்கோ."

" தாங்ஸ்..."

பாலசுப்பிரமணியத்திற்கு யாழ்ப்பாணத்தையும் அங்கு வாழும் மக்களையும் நினைக்க வேதனையாகவும் அதே வேளை கவலையாகவும் இருக்கிறது. எவ்வளவு அற்புதமான, அமைதியான, அழகான பிரதேசம். கிணற்று நீரை நம்பித் தோட்டந்துரவோடும், கல்வியில் மேம்பட்டு உத்தியோகங்களோடும் வாழ்ந்து செழித்த மக்கள். இன்று கிணற்றுநீர் மட்டும் வற்றாதுண்டு. தோட்டத் துரவுகள் தரிசுபற்றிவிட்டன. கப்பலையும் அவற்றில் வருகின்ற நிவாரணப் பொருள்களையும் எதிர்பார்த்து மக்களில் ஒரு பகுதியினர். இன்னொரு பகுதியினர் பிரச்சினைகளிலிருந்து தப்பியோடும் விருப்போடும் பொருளாதார நோக்கோடும் வெளிநாடுகளில் சிதறிவிட்டார்கள். யாழ்ப்பாணி இல்லாத உலகநாடு எதுவுமில்லை என்ற நிலை இன்று உருவாகிவிட்டது. இது ஆரோக்கியமான சமுகநிலையல்லவென அவர் எண்ணிக்கொண்டார்.

கதிரையைவிட்டு எழுந்தபோது எதிரில் தலையைச் சொறிந்தபடி இராமையா நின்றிருந்தான். அவர் ஒரு பத்து ரூபாவை எடுத்து நீட்டி " ரீ குடி ராமையா" என்றார்.

அவன் பணிவோடு அதனை வாங்கிக்கொண்டான்.

" சார், எத்தனைபேர் இங்கேயிருந்து ஒவ்வொரு நாளும் வெளிநாட்டிற்குப் போறாங்க, எனக்கும் ஒரு ஆசை; என்ர பையனையும் ஒருக்கா அனுப்பவேணுமெண்டு, நல்ல ஏசண்டுதான் அகப்படவில்லை."

பாலசுப்பிரமணியம் அவனைக் கவலையோடு பார்த்தார்.

'' அவன் என்ன செய்யிறான்?''

''கம்பனியொண்டில வேலைபார்க்கிறான்; மூவாயிரம் சம்பளம் வருகுது.''

'' அவனைப் பழுதாக்காதை. அவனைச் சுதந்திரமாக இங்க இருக்கவிடு. அங்க அனுப்பி உன்னைமாதிரி வாட்ச்மேனாக வேலைபார்க்க வைக்காதை. ''

'' சார் அங்க?''

'' பின்ன வெளிநாட்டில பெரிய வேலையா தரப் போறாங்கள் ?''

''இவ்வளவு செலவழிச்சு இதுக்கா அங்க போறாங்க?''

'' நீ நினைக்கிறமாதிரியில்லை ராமையா, இரவும் பகலும் வேலை. பகலில் மனைவி வேலைக்குப்போய் திரும்பி வரும்போது கணவன் இரவில் வேலைக்குப் புறப்பட்டிருப்பான். பிள்ளைகள் சில்ரன் கெயர் சென்ரர்களில். கடுங்குளிர். வெளியில் திரியமுடியாது. பணம், பணம், உழைப்பு. வாழ்வதற்குப் பணம் தேவைதான். ஆனால் உழைப்பதற்காகத்தான் அந்த நாடுகளில் நம்மவர்கள் வாழ்கின்றனர் ராமையா.''

வெகுநேரம் இராமையா அப்படியே நிலைகுத்தி நின்றிருந்தான்.

* * *

# 5

சுகீர்தன் கன்ரீனுக்கு வந்தபோது, மலர் குளிர் பானத்தை உறிஞ்சிக்கொண்டிருந்தாள். அவளோடு பேசுவதற்கு அவன் பல தடவைகள் முயன்றிருக்கிறான். தக்க தருணம் இதுவரை கிடைக்கவில்லை. மதியவேளை கடந்து சிறு தூக்கம் போடும் நேரம். கன்ரீனில் அவ்வளவு ஆட்களில்லை.

அவன் மலர் அருகில் சென்று தயங்கி நின்றான்.

''நீங்கள் மகாஜனாவிலா படிச்சனீங்கள்?''

நிமிர்ந்தாள்: ''ஓம்.''

''நானும் அங்கதான் படிச்சனான். நான் ஏ. எல். படிக்கேக்க, நீங்க ஓ. எல். மலர் எல்லோ உங்கட பெயர்?''

''ஓமோம். உங்களை எனக்குத் தெரியும். 'பிறிபெக்ரா' இருந்தனீங்கள். அடிக்கடி என்னை வெருட்டினீங்க. சசிகலாவின்ரை அண்ணையெல்லோ?'' என அவள் சிரித்தாள்.

இனிமையும் கவர்ச்சியும் அப்பிக்கிடந்த அந்தச் சிரிப்பில் அவன் மெதுவாகக் கரைந்துபோனான். இவ்வளவு சகஜமாக அவள் பேசுவாள் எனச் சுகீர்தன் எண்ணியிருக்கவில்லை.

''இருங்களேன்...'' என்றாள் எதிரில் இருந்த கதிரையைச் சுட்டிக்காட்டி. அவன் அமர்ந்துகொண்டான்.

''கூல்றிங் குடியுங்கள்...'' என்று அவள் தன் போத்தலிலிருந்த ஸ்ரோவை எடுத்துவிட்டு அவனிடம் நீட்டினாள். அவன் வெக்கித்துப்போனான்.

''நான் வாங்கிறேனே?''

''வீண்... இது எனக்குக் கூட...''

அவள் வற்புறுத்த அவன் போத்தலை வாங்கிக்கொண்டான். அவன் அண்ணார்ந்து குடிக்க முயன்றபோது, ''ஸ்ரோ தரவா?'' எனத் தன் கையிலிருந்த ஸ்ரோவை அவனிடம் நீட்டினாள். அவன் வியப்புடன் வாங்கக் கரத்தை நீட்டியபோது, ''இது எச்சில்... வேறை எடுத்துத் தாறன்'' என்றவளை,

''பரவாயில்லை'' என அவசரமாகக் கூறிய அவன் அதனைப் பறித்து உறிஞ்சத்தொடங்கினான்.

இனந்தெரியாத ஆனந்த உணர்வு சுகிர்தனுள் புகுந்தது. பாடசாலை நாட்களில் அவன் மனதைக் கவர்ந்த ஒரு பெண் எதிரில் அழகேயுருவாக அமர்ந்திருக்கிறாள். அவள் உதடுகள் பற்றிய ஸ்ரோவை அவன் உதடுகள் பற்றியுள்ளன.

''எக்ஸ்ரா சுவீற்றாக இருக்குது...'' என்று அவன் கூறினான். அதனை முதலில் புரிந்துகொள்ளாது சற்றுக் காலக் கழிவில் புரிந்துகொண்டபோது மலர் வெட்கத்துடன் தலையைக் குனிந்துகொண்டாள். கன்னங்கள் சிவந்தன போல அவனுக்குப்பட்டது.

'' உங்கட இடமெல்லாம் ஆமி என்ன?''

'' ஓமோம். நாங்கள் இப்ப கந்தரோடையில இருக்கிறம்; எங்கட வீடெல்லாம் தரைமட்டமென்று கேள்வி. என்ன செய்யிறது. நீங்க இப்ப பி.எஸ்.சி.; படிப்பிக்கிறீங்களா?''

''ஹின்டுவில... நீங்க ஏ.எல். எடுத்தனீங்க என்ன...?''

''எடுத்தன், யூனிவேசிற்றிக்கு வர மூன்று மாக்ஸ் காணாது. விட்டிட்டன்'' என்று கன்னம் குழியச் சிரித்தாள்.

'' சசிகலாவைக் கனடாவிற்கு அனுப்பப் போறீங்களா? அங்கயா பிக்சாகியிருக்குது?''

''ஓமோம். பெரும்பாலும் ஓரிரு நாட்களில் பிளைற். நீங்க ஏன் இங்க...?''

அவள் முகம் சற்று வாடியது. கரமொன்றில் நாடியைப் பதித்துக்கொண்டாள். விழிகள் சிரமத்துடன் மூடித் திறந்தன. இனந்தெரியாத சோகம் முகத்தில் படர்ந்தது.

''ஏதாவது தப்பாகக் கேட்டுவிட்டேனா?''

'' இல்லையில்லை...'' என்று சற்றுத் தயங்கிவிட்டு ''ஜேர்மனியிலிருந்து இங்க ஒருவர் வரப்போறார், அவர் யார், எப்படிப்பட்டவர் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. கலியாணம் கட்டிக்கொண்டு போகப்போறார். நான்தான் மணமகள். அவ்வளவுதான்'' என்றாள்.

சற்றுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

'' யாழ்ப்பாணப் பெற்றோருக்குப் பெண்பிள்ளைகள் பெருஞ்சுமை. எப்படியாவது ஒருத்தனிடம் ஒப்படைத்து விட ஏன்தான் தவிக்கிறார்களோ?''

'' அவரைத் தெரியாதா?'' என்று இரக்கத்தோடும் ஏமாற்றத்தோடும் அவன் கேட்டான். ஏமாற்ற உணர்வு ஏன் வந்தது? நெற்றியை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

''படத்தில பார்த்திருக்கிறன். நல்ல குண்டு'' எனச் சிரிக்க முயன்றாள்: '' நல்லாத் தண்ணி போடுவார் போல இருக்குது.''

"விருப்பமில்லையெண்டால் சொல்ல வேண்டியது தானே?"

"அப்பாவிடமா? அவர் பாவம், இந்த யுத்தத்தில் அவர் எல்லாவற்றையும் இழந்துவிட்டார் சுகீர்தன்." அவள் விழிகள் கலங்கின: "குண்டுவீச்சிலே அவரது ஒரே தங்கச்சி குடும்பம், மொத்தம் ஆறுபேர்... உடல் சிதறி... கோரம்... நினைத்தாலும் அக்காட்சியை மறக்க முடியவில்லை. அதுக்குப் பிறகு அப்பா இந்த நாட்டை விட்டு எங்காவது ஓடிவிடவேணுமெண்டு துடிக்கிறார். என் திருமணத்தின்மூலம் அது சாத்தியப்படலாமென நம்புகிறார். அவர் மனதை நோகச்செய்ய நான் விரும்ப வில்லை."

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். கண்களிற் கோர்த்த நீரைத் துடைத்துக்கொண்டாள். சோகத்தை முற்றாக வீழுங்கிக்கொண்டவள்போல நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்.

அவன் இரக்கத்தோடு அவளை ஏறிட்டான்.

"அவரோட கதைச்சீங்களா மலர்?"

"யாரோடை?"

"உங்களுக்குப் பிக்சாயிருக்கிறவரோட "

"கதைச்சன். அவர் அவ்வளவு ஆர்வமாகப் பேசுவ தாகத் தெரியவில்லை. அவர் பேசும்போது என் மனதில் மெல்லிய ஒரு நெருடல் ஏற்பட்டுகின்றது. சம்திங் றோங் தற்சயிட் என உள்ளுணர்வு கூறுகிறது. என்ன செய்யிற தெண்டு தெரியவில்லை. உங்கட தங்கச்சி சசிகலா கனடா மாப்பிள்ளையோட பேசிவிட்டு வரும்போது அவ முகத்தில இருக்கிற சந்தோசம், பூரிப்பு என்ர முகத்தில

இல்லை. இதை யாரிட்டச் சொல்லி அழுவன்? உங்களிட்டச் சொல்லி மன ஆறுதல்பெற... ஏதோவெல்லாம் விசர்க் கதை கதைக்கிறன்."

"அப்படியில்லை மலர்... சொல்லும்..."

அவள் அண்ணார்ந்து சீலிங்கைப் பார்த்தாள். கழுத்தில் செவ்வரி நரம்புகள் புடைத்திருந்தன. தொண்டை முடிச்சு ஏறியிறங்கியதிலிருந்து அவள் தன் துயரத்தை மறைக்கக் கஷ்டப்படுகிறாள் என்பது புரிந்தது.

"எங்கட யாழ்ப்பாணம் எவ்வளவு இனிமையானது? கோயில், குளம், வயல், ஒழுங்கை... தென்னை... கிணறு... உறவினர் .. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஓடிப் போவதில் எனக்குத் துண்டாக விருப்பமில்லை."

அவள் தொடர்ந்தாள்: "அமைதி ஒண்டுதான் எங்கட மண்ணில இல்ல, இல்லாவிட்டால் உலகத்தில இதற்கு நிகராக எங்குமிருக்க முடியாது. இந்த மனிதர்களுக்கு என்ன பிடித்து விட்டது? ஏன் இப்படிச் சண்டை பிடிக்கிறார்கள்? எத்தனை உயிர்கள்? வாழவேண்டிய இளம் வயதில... ஏன்?... ஏன் சுகிர்தன்?"

"அது சுதந்திரத்தின் விலை என்கினம்."

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கு ஒரு உதவி செய்வியளா? எனக்கு இந்த நாட்டைவிட்டு ஓடுவதில் விருப்பமில்லை. இந்தக் கலியாணம் நடக்கக்கூடாது."

"அதுக்கு என்ன செய்ய வேணும்?"

''எனக்கு ஒன்றுவிட்ட தம்பி ஒருவன் ஜேர்மனியில் இருக்கிறான். அவனுக்குப் போன் பண்ணணும். எனக்குப் பிக்சாயிருப்பவரின் அட்றசைக் கொடுத்து விசாரிக்க வேணும். றியலி சம்திங் றோங் தற்சயிட்... அது எதுவென அறிய வேணும் அப்பாவைச் சமாதானப்படுத்தச் சரியான காரணம் தேவை: நான் வந்த மாதிரியே யாழ்ப்பாணத்துக்குப் போகணும். என்ர வீட்டிற்குப் போகணும். செத்தாலும் சரி, வாழ்ந்தாலும் சரி, அது அங்கேயே நடக்கணும் சுகிர்தன்.''

''மலர் முதலிலேயே தம்பியை விசாரித்திருக்க லாமே?''

''அப்பாவுக்கும் சித்தப்பாவுக்கும் அவ்வளவு சரி யில்லை. அதனால அப்பா விசாரிக்க விரும்பவில்லை. விசாரிச்சா கல்லுக்குத்திப் போயிடுவினமெண்டு...''

''சரி போன் எடுப்பம், நம்பரைத் தாங்க...''

அவள் எழுதிக் கொடுத்தாள்.

''நீங்க புக் பண்ணுங்க, ஒரு நிமிடக்கோல். என் னோட பேசச்சொல்லித் தம்பிக்கு என் நம்பரைக் கொடுங்க, அவன் நிச்சயம் என்னுடன் பேசுவான். பிளீஸ் .''

மலர் திடீரெனத் தன்னையறியர்மல் அவன் கரத்தின் மேல் தன்கரத்தை வைத்து இரந்தாள். அவனுடலில் இன்பக்கதிர்கள் ஊடுருவிப் பாய்ந்தன.

''ஐ வில் டு இற் .. இரவு பத்துமணிக்கு எடுத்துத் தாறன் ..''

''தாங்ஸ் ..'' என்று அவள் சிரித்தாள்.

'பெண்ணே, அந்த நாட்களில் உனக்காக என் இதயம் ஏங்கியதை நீ அறிவாயா? உன்னோடு பேசுவதற்காகவே உன்னை வெருட்டுவது போலப் பேசிக்கொண்டேன். உன் இனியமுகம் என் ஆழ்மனதில் பதிந்து கிடந்தது. இத்தனை வருடங்களுக்குப்பிறகு, இங்கு உன்னைக் கண்டதும் வேகமாக மந்திர அவரைக்கொடிபோல வளர்ந்து விட்டது. நீ எனக்குக் கிடைப்பாயா? இவ்வளவு காலமும் பனி இரவிலும், முழுநிலவிலும் என் நெஞ்சுத்தரையில் நர்த்தனம் புரிந்த இனந்தெரியாத அழகு உருவம் நீதான் என்பதை இங்கு வந்து புரிந்து கொண்டேன். மலர்... மலர்... எனக்கு நீ வேண்டுமடி.'

- இதயம் ஓலமிட்டு ஏங்கியது.

சுகிர்தன் தன் முகத்தை மீண்டும் அழுத்தித் துடைத்துக்கொண்டான்.

* * *

# 6

ஐந்து மணிக்கு லொட்ஜ்ஜிற்குப் பரமலிங்கம் வந்த போது புஷ்பா தயாராக வாசலில் நின்றிருந்தாள். ஹாப்ஸ்கேட் பிளவுசில் அவள் மிக எடுப்பாகவும் பாட சாலை மாணவி மாதிரியும் தோற்றம் தந்தாள். முகத் தில் கவலையும், கணவனோடு பேசப்போகிறோம் என்ப தனால் ஏற்பட்ட ஆவலும் தெரிந்தன.

''நல்ல வடிவாக இருக்கிறியள்...'' என்றான் பரம லிங்கம்.

''கெதியில் உமக்கொரு கலியாணத்தைக் கட்டிவைக் கும்படி பரமேஸ் அக்காட்டச் சொல்லவேணும். இல்லாட் டில் நீர்...'' என்று புஷ்பா கடிந்துகொண்டாள். சேலையை எடுத்து உடுத்த நினைத்தபோது ஏதோ மனதில் எழ 'ஹாப்ஸ்கேட்' பிளவுசை அணிந்துகொண்டாள். தான் சொல்லித்தான் அணிந்திருக்கிறாள் என்று லிங்கன் நினைக்கிறானோ?

''கட்டாயம் சொல்லுங்கோ'' என்று அவன் சிரித் தான்: ''யாழ்ப்பாணத்து இளைஞருக்குத் திருமணமாவ தென்றால் இலேசான காரியமல்ல. எனக்கு இரண்டு தங்கச்சிமார் இருக்கினம் தெரியுமா? இன்னமும் ஐந்தாறு வரியமோ அதற்கும் கூடவோ?''

அவர்கள் வீதியில் நடந்தார்கள்.

''லிங்கன் அவர் இண்டைக்குப் போன் பண்ணு வாரோ?'' என புஷ்பா இருந்தாற்போலக் கேட்டாள்.

''பண்ணுவார்தானே? ஏன் ஏதாவது உங்களுக்குள் பிரச்சினையா?''

''இல்லை, ஆறேழுமாதமாகச் சரியாகக் கடிதத் தொடர்பில்லை. அதுதான் கவலையாகவிருக்குது.''

''ஒரே வேலையாக்கும். நைற் டியூட்டியெண்டால் எங்க கடிதம் எழுதுவதற்கு நேரம்? அது சரி, லொட்ஜ் அறையில் நிம்மதியாகத் தூங்கமுடிகிறதே?''

'' கஷ்டம்தான் ஒரே சனவெக்கை. அறையில் காத்தேயில்லை.''

''என்ரை அறையில 'பான்' இருக்குது. நீங்க பகலில அங்க வந்திருக்கலாம். நான் வேலைக்குப் போனால் ரூமில இருக்கலாம். புத்தகங்கள் இருக்குது. படிச்சுக் கொண்டிருக்கலாம். அசதி வந்தால் தூங்கலாம்.''

'' பாப்பம் லிங்கன். ''

அவர்கள் கொம்யூனிகேசனில் நெடுநேரம் காத்திருந்தார்கள். ஒவ்வொரு முறையும் தொலைபேசி அணுங்கிய போது அவளுக்குப் பதைபதைப்பு ஏற்பட்டது. புஷ்பா இருக்கையில் இருக்கமுடியாது தவித்தாள். அவள் நிலையைப் பார்க்கப் பரமலிங்கத்திற்கு இரக்கம் ஏற்பட்டது. மூன்று மாதங்கள் வாழ்ந்துவிட்டு ஒன்றரை வருடமாகப் பிரிந்திருக்கும் ஒருவருக்காக இங்கு இப்படி ஒரு பெண் தவிப்பதா?

''எடுப்பாரா ?''

புஷ்பா இந்தக் கேள்வியைப் பலதடவை லிங்கனிடம் கேட்டுவிட்டாள்.

ஆறரை மணிக்கு அவள் எதிர்பார்த்த அழைப்பு வந்தது. விருட்டென்று எழுந்து கண்ணாடிப் பூத்திற்குள் புகுந்து ''ஹலோ'' என்றாள் படபடப்புடன்.

''புஷ்பாவா?'' என்று எதிர்முனையில் வியப்புத் தொனித்தது.

''ஓம்... உங்க புஷ்பர்தான். நேற்றுத்தான் வந்தன். எப்படியிருக்கிறீங்க? ஆறேழு மாதமாகக் கடிதம் போட இல்லை. நான் வாரத்துக்கு ஒரு கடிதம் போட்டேனே? ஒரு சின்ன லெட்டராவது கிறுக்கியனுப்பக்கூடாதா? மறந்திட்டீங்களா?'' அவள் அவனைப் பேசவிடாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

''பேசி முடிச்சிட்டியா புஷ்பா? இவ்வளவு கஷ்டப் பட்டுக் கொழும்புக்கு ஏன் வந்தாய், புஷ்பா? கடிதம் எழுதியிருக்கலாமே?''

''எத்தனை கடிதங்கள் எழுதினன்...''

''எனக்குக் கிடைக்கவில்லை.''

''பொய்...''

''நானேன் பொய்சொல்லுறன் புஷ்பா? நானுந்தான் உனக்குக் கடிதங்கள் போட்டன். கிடைக்கவில்லை என்கிறாய். கொழும்பில் எடுத்துக் கிழிக்கிறாங்கள். காசு அனுப்பினால் பிரிச்சு எடுக்கிறாங்களாம்.''

''சரி நம்புறன். என் நினைவாவது இருக்குதா? நான் நிம்மதியாக நித்திரைகொண்டு ஒன்றரை வரியமாகுதுங்க. நீங்க எப்படி இருக்கிறியள்? ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது வந்து போகலாமல்லவா? அப்படி வந்து போகினம் தானே? லீவு கிடைக்குமாமே?''

அவன் தன் தாபத்தைப் புரிந்துகொண்டு தன் காதலை வார்த்தைகளில் வெளிப்படுத்துவானெனப் புஷ்பா நம்பினாள். அவன் இறுகிய குரலில்,

''இதோ பார் புஷ்பா, நீ என் மனைவிதான். அதுக்காக... எனக்கு இங்க சில பொறுப்புக்கள் இருக்குது.

தங்கச்சிமார் இருக்கினம். உழைக்கவேணும். மற்றவை மாதிரி ஆறு மாதத்திற்கு ஒருக்கா வந்து படுத்திட்டுப் போக முடியாது...'' என்றான்.

அவள் துடித்துப்போனாள். குடும்ப உறவை அவன் இவ்வளவு கொச்சையாக எண்ணுகிறானா? அவள் விழிகள் கலங்கித் தவித்தன.

''கனநேரம் பேசமுடியாது புஷ்பா. வீண் செலவு.''

அவள் இப்பொழுது உண்மையாகவே மனமொடிந்து போனாள்.

''வைச்சிடாதிங்க... கொஞ்சநேரம் பேசுங்க.''

'' சரி என்னவெண்டு சொல்லு.''

'' நீங்கதான் சொல்லவேணும்...''

''காசு வேணுமா? உங்க ஒரு ரெண்டு நாள் நிண்டு கொள். கொஞ்சமனுப்பிவைக்கிறன். வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குப் போய்ச்சேர். அதுசரி, கொழும்புக்கு ஆரோட வந்தனி?''

'பக்கத்துவீட்டுப் பரமலிங்கம் தம்பியுடன்' என்று கூற வாயெடுத்தவள் ஏனோ தயங்கினாள். கூறவில்லை.

''ஒரு குடும்பம் வந்தது. பொம்பிளையைக் கனடாவுக்கு அனுப்ப... சசிகலா, தெரிஞ்சவை. அவையோட வந்தன்.''

''சரி கொழும்பில் கனகாலம் நிக்கவேணாம். யாழ்ப்பாணத்திற்குப் போய்ச்சேர். நான் அம்மாவுக்கு அனுப்பிய காசு கிடைச்சுதாமா?''

'' அனுப்பினீங்களா?''

'' ஓம். ''

'' எனக்குத் தெரியாது. ''

'' நீ அங்க போறதில்லையோ? ''

'' அவர்கள் எவரும் வருவதில்லை. ''

துரைரத்தினத்தின் மௌனம் அவனது கோபத்தைக் காட்டியது.

''நீ என்ன பெண்...'' என்று அவன் கத்தினான்.

புஷ்பாவிற்கு அவளையறியாமல் சினம் பொங்கத் தொடங்கியது. அன்பான, ஆறுதலான வார்த்தைகளை எதிர்பார்த்து வந்தவளுக்கு வசைப்பேச்சு.

'' இது உங்களுக்கே நல்லா இருக்கா? ''

'' எது? ''

'' இப்படிப் பேசுறது? .. நடக்கிறது... ''

'' எப்பிடி நடக்கிறன்? ''

''மாசிலாமணி எல்லாம் எழுதிவிட்டான். நீங்க ஆடுற கூத்துக்களை. ஆரோ ஹவுஸ்மெயிட்டோட ஞாயிற்றுக் கிழமையில...''

துரைரத்தினம் பெரிதாகச் சிரிப்பது காதுகளைத் தாக்கியது. நெஞ்சில் இடியாகப் படிந்தது. அவன் சிரித்த படி சர்வசாதாரணமாகக் கூறினான்: '' என்னை என்ன இங்க சாமியாராக இருக்கச்சொல்லுறியா? இங்க ஒருத்தரும் சாமிமார்களாகவில்லை. ''

'' ஐயோ... '' என விம்மினாள் புஷ்பா.

''இதோர் பார், பதறாதை .. நீ என்ர மனிசிதான். தாலி கட்டிய மனிசிதான், அதுக்காக இதைப் பெரிசு படுத்தாதை ..''

''உங்களுக்கு இப்படிச் சொல்ல வெட்கமாயில்லை, கட்டிய மனிசிகிட்டயே சொல்லிறியளே?''

''இதிலே என்ன வெக்கம்? இப்ப என்ன உன்னை விட்டிட்டு அந்தச் சிங்களத்தியைக் கட்டப்போறன் என்றனா?''

கண்கள் மடைதிறந்து கொட்டின. புஷ்பாவால் விழி நீரைத் துடைக்க முடியவில்லை. அவள் இதயம் சிதறி விட்டதுபோல உணர்வு. அவளது கனவுகள், கற்பனைகள் அனைத்தும் பொடிப்பொடியாயின.

''புஷ்பா, ஆம்புளையள் அப்படித்தான் இருப்பினம். நாளைக்கு இதே நேரம் பேசுவன். அதுக்கிடையில நீ இருக்கிற லொட்ஜுக்கு ஒருத்தன் பணங்கொண்டு வந்து தருவான் உண்டியலில். எவ்வளவு தந்தான் என நாளைக் குச் சொல். வைக்கிறன்... வேலைக்கு நேரமாகுது.''

அவன் போனை டக்கென்று வைத்த சத்தம் அவள் காதுகளில் பொம்பர் குண்டாக வெடித்தது. திக்பிரமை பிடித்துப்போய் றிசீவரைக் கரத்தில் பற்றியபடி திகைத் துப்போய் நின்றிருந்தாள்.

இதுவரை அவளைக் கவனித்த பரமலிங்கம் எழுந்து போய் பூத் கதவைத்திறந்து அவள் கரத்திலிருந்த றிசீ வரை வாங்கி இருப்பில் இட்டான்.

''என்ன? என்ன?''

அவள் எதுவும் பேசவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

''முப்பது நிமிடம்... தொண்ணூறு...'' என்றாள் ரிசப்சன் கன்னி. பரமலிங்கம் காசைக்கொடுத்து விட்டுத் திரும்பும்போது புஷ்பா வீதியில் இறங்கி நின்றிருந்தாள்.

''என்ன? என்ன நடந்தது?''

''ஒண்டுமில்லை லிங்கம், எனக்கு இப்ப எங்கையாவது கொஞ்ச நேரம் இருந்து அழவேணும். மனம்விட்டு அழவேணும் ''

''அறைக்குப் போவம்...''

அவன் அவளைத் தன் அறைக்கு அழைத்து வந்தான். அறைக்குள் நுழைந்த அவள் கட்டிலில் அமர்ந்து விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

சற்று நேரம் அவளை அழவிட்டு, '' அழாதீங்க .. அழாதீங்க...'' என்று ஆறுதல் கூறியவாறு அவள் அருகில் அமர்ந்து அவளது கன்னங்களில் வழிந்த கண்ணீரை அவன் துடைத்தான். அவளுக்கு ஆறுதல் தேவை. அவள் அவன் செய்வதைத் தடுக்கவில்லை. மெதுவாக அவளைத் தன்னோடு அணைத்துச் சாய்த்து முதுகில் ஆதரவாகத் தடவிக் கொடுத்தான்.

அவள் அவனைக்கட்டிக்கொண்டு குமுறத்தொடங்கினாள். கரங்களால் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவன் இப்பொழுது உதடுகளால் துடைக்கத் தொடங்கினான்.

* * *

# 7

லொட்ஜில் என்றுமில்லாத கலகலப்பு நிறைந்திருந்தது. பாலசுப்பிரமணியம் வெளியில் போய்விட்டுத் திரும்பி வந்தபோது இரவு எட்டரை மணி. மூலைக்கு மூலை கூடிப்பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன விடயமாக இருக்கும்?

''பார்லா'' என வாயெல்லாம் பல்லாக இரத்தினத்தார் வந்தார்: ''வசந்தனுக்கு இன்றைக்கு இராத்திரி பிளைற். ஏசண்டு ராஜன் வந்து றெடியாகச் சொல்லி விட்டுப் போறான். மற்ற ஏசண்டுக்காரனும் ராஜீ என்ற பிள்ளையைச் சுவீசுக்கு அனுப்புறான். அது பாஸ்போட்டில முகம் மாற்றி வசந்தனுக்கு அப்படியில்லை. அவனோட ஒன்பது பேர் போகினமாம். சிங்கப்பூரில இவர்களைப் பொறுப்பேற்று மற்ற பிளைற்றில ஜேர்மனிக்குக் கூட்டிச்செல்ல ஆள் இருக்குமாம்.''

அந்த யாழ்ப்பாணத்து அப்பாவித் தந்தையைப் பாலசுப்பிரமணியம் இரக்கத்தோடு பார்த்தார். எத்தனை கனவுகளோடு மகனை வெளிநாட்டிற்கு அனுப்புகிறார்? வெளிநாட்டுப் பயணம் என்பது இன்று இலகுவான செயற்பாடல்ல. எத்தனை தடங்கல்கள்? எத்தனை ஏமாற்றங்கள்?

ஏஜண்டுகளின் வார்த்தைகளை நம்பி ஏமாந்தவர்களை அவருக்குத் தெரியும். இலட்சக்கணக்கில் கட்டி ஒட்டாண்டியானவர்கள். கட்டிய பணத்தைக் கேட்டதற்காக 'கொட்டியா' என உள்ளே தள்ளப்பட்டவர்கள்.

''நன்றாகப் போய் வரட்டும். சந்தோசம் இரத்தினம்'' என்றார் பாலசுப்பிரமணியம்.

வசந்தனுக்கு அவன் தாய் தவமணி கண்களில் நீர் வழிய ஆலோசனைகள் கூறிக்கொண்டிருந்தாள்.

''கவனம் அப்பு, உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள். கண்டநிண்ட பழக்கங்கள் பழகிவிடாதை. உன்னை அனுப்பிவிட்டு எப்படி இருக்கப்போறனோ?'' அவனைத் தடவித்தடவி அத் தாய் கண்ணீர் விட்டாள். வசந்தனும் தளர்ந்து போனான். பயவுணர்வு மனதை ஆக்கிரமித்தது. கிளாலி தாண்டி முதன்முதல் கொழும்பு வந்திருப்பவன் வெளிநாட்டிற்குச் செல்வதென்றால்..?

''சரி அம்மா... கவனமாக இருக்கிறன். நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்பட வேண்டாம்.''

சரியாகப் பத்துமணிபோல ஏஜண்ட் ராஜன் எல்ஃப் வாகனமொன்றில் தடல்புடலாக வந்திறங்கினான். அவனைத் தொடர்ந்து ராஜியை ஏற்றிச்செல்லும் எல்ஃப் வாகனமும் வந்து நின்றது.

ராஜன் வசந்தனை அறைக்குள் கூட்டிச் சென்றான். இரத்தினத்தாரும் தவமணியும் பின்னால் தொடர்ந்தனர்.

''வசந்தன், இந்தா பாஸ்போர்ட்; இது ஜெர்மன் பாஸ்போர்ட், இதுக்கு மட்டும் ஐம்பது செலவு. வித்தியாசம் காணமுடியாது. உம்மடை பெயர் இனிக் கனகராசா, மறந்திடாதையும். சிங்கப்பூரில துருவித்துருவிக் கேட்பான்கள். ஜேர்மனியில் பிராங்போர்ட்டில் இருப்பதாகக் கூறும். இப்ப இதில் கனகராசாவென சைன் பண்ணும். அப்படியே இனி சைன் பண்ணும்; சரியே? நீர் மூன்றாண்டுகளுக்கு முன்னர் ஜேர்மனி சென்றீர். இப்ப இலங்கைக்கு வந்திட்டுத் திரும்பிப் போகிறீர்; புரியுதா?''

ராஜன் பலதடவை எடுத்துக்கூறி வசந்தனுக்குப் புரிய வைத்தான்.

''உம்மடை பெயர் என்ன?''

''கனகராசா...''

''எங்கை வேலை செய்யிறீர்?''

''ப்ராங்போர்ட்...''

''சொந்தப்பெயரில் போகேலாதா?'' என்றார் இரத்தினத்தார் பயத்துடன்.

''அது கஷ்டம். பிராங்போர்ட் விமானத்தில இறங்குமுன் நீர் பாஸ்போட்டைக் கிழிச்சுக் 'கொமேட்டில' போட்டுத் தண்ணியை 'பிளாஷ்' பண்ணிவிடும்'' என்றான் ராஜன்.

''இவ்வளவு கஷ்டமா? கவனமடா தம்பி...'' என்று பயத்துடன் இரத்தினத்தார் மகனுக்குக் கூறினார்.

''பயப்படாதேங்கோ...'' என்றான் வசந்தன். உதடுகள் கூறினாலும் நெஞ்சு படபடவென்றது.

வசந்தன் கோட் சூட் ரையோடு, சப்பாத்துக்கள் கால்களை வெட்ட விடைபெற்று வாகனத்தில் ஏறிக் கொண்டான்.

'கண்பட்டிடும்' எனத் தவமணி எண்ணிப் பெருமைப் பட்டாள்.

''சிங்கப்பூர் போய் இறங்கியதும் எங்களுக்கு ஒரு போன்கோல் போடு. லொட்ஜ் நம்பர் எழுதி வைச்சிருக்

கிறாய் தானே?'' என்று பாலசுப்பிரமணியம் தன்னிடம் விடைபெற வந்த வசந்தனிடம் கூறினார்: ''வாயுள்ள பிள்ளை பிழைத்துக்கொள்ளும். போயிட்டு வா மோனை.''

வாகனங்கள் புறப்பட்டு கோல்பேஸ் வீதியிலேறிக் கரைந்து போயின.

வெகுநேரம் இரத்தினத்தார் வாசலில் சிலையாய் நின்றிருந்தார்.

''உள்ளே வாடாப்பா. அவன் நல்லாப் போய்ச் சேர்ந்து உழைச்சு அனுப்புவான். ஜேர்மனி என்ன கன தூரமே? யாழ்ப்பாணத்திலும் பார்க்கக் கிட்டடி... டயலைச் சுற்றினால் ஒரு நிமிடத்தில் ஹலோ. பாக்சில கடிதத்தைச் செருகினால் ஒரு நிமிடத்தில் அது பொடியனெட்ட போய்ச் சேர்ந்துவிடும். உலகம் நல்லாச் சுருங்கி விட்டது கண்டியோ! ஆனா யாழ்ப்பாணந்தான்...'' பாலசுப்பிரமணியம் சற்றுக் கவலையுடன் மௌனமாக இருந்தார்: ''நாங்க முன்னூறு வருஷம் பின்னால் போயிட்டம்போல கிடக்குது.''

அவர் கூறியவற்றை இரத்தினத்தார் கிரகிக்கும் நிலையிலில்லை.

''பாலா, சிங்கப்பூரிலிருந்து எப்ப ரெலிபோன் கோல் வரும்?''

''நள்ளிரவுக்குப் பிறகுதான் பிளைற் என்றவன். அப்ப எப்படியும் காலை ஐந்தாறுக்குள்ள வரும். ஒண்டுக்கும் பயப்படாதை.''

அவர்கள் உள்ளே போகத் திரும்பியபோது, சற்றுத் தூரத்தில் புஷ்பாவும் பரமலிங்கமும் நடந்து வருவது தெரிந்தது. அவர்கள் கிட்ட வந்ததும்,

## கொழும்பு லொட்ஜ்

''பிள்ளை, வசந்தனுக்கு இண்டைக்குப் பிளைற். எயர்போர்ட்டிற்குப் போட்டான்'' என்றார் இரத்தினத் தார். குரலில் பெருமிதமும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தன.

''மெய்யர்வே?...'' என்றாள் புஷ்பா.

''அவரோடு பேசினியே தங்கச்சி?''

''ஓமோம் அம்மான்.''

''என்னவாம்..''

''காசு அனுப்புகிறாராம் ''

''நான் வாறன்..'' என்று பரமலிங்கம் விடை பெற்றுச் செல்ல, புஷ்பா தன்னறைக்குச் சென்றாள். மனதில் இனந்தெரியாத பயமும் குதூகலமும் தேங்கிக் கிடந்தன. தப்பாக நடந்து கொண்டோமோ என்ற எண்ணமும் எழுந்தது. அவள் மனமும் உடலும் இலேசாகி விட்டது.

ஒன்றரை வருடங்களாகக் கொதித்த எரிமலை அவிந்து போனது.

'என்றாலும் லிங்கன் பொல்லாதவன்' எனக்கூறி அவள் சிரித்துக்கொண்டபோது சசி உள்ளே வந்தாள்.

'என்னக்கா வலு சந்தோசமாகவிருக்கிறியள்? அவ ரோட பேசினியளே?''

''ஓம்..''

அப்போது கீழிருந்து, ''மலர்... மலர்... றங்கோல்'' என்று அழைப்பு எழுந்தது. அதனை எதிர்பார்த்துக் கீழே காத்திருந்த மலர், சுகிர்தனைப் பார்த்துப் புன்ன கைத்துவிட்டு பூத் ஒன்றினுள் நுழைந்தாள்.

''ஹலோ நான் மலர்...''

''அக்கா... அக்கா நான் ரவி...''

''தம்பி...''

''அப்படியே ஐஞ்சாறு தடவை கூப்பிடக்கா, கூப் பிடக்கா...'' என அவன் விம்மினான். மலர் அந்தப் பாசப்பிணைப்பில் ஒரு கணம் விக்கித்துப் போனாள். இவ்வளவு ஏக்கங்களா?''

''தம்பி... ரவித்தம்பி... தம்பி...''

''அக்கா அவசரப்பட்டுப் போனை வைச்சிடாதை. இத்தனை வருஷத்துக்குப்பிறகு என்னோட நீதான் அக்கா பேசிறாய். எப்படியிருக்கிறியள்? பெரியப்பா எப்படி? பெரியம்மா எப்படி?''

''எல்லாரும் இங்க இருக்கினம் தம்பி. எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேணும், நாங்க இப்ப கொழும்புக்கு வந்திருக்கிறம்.''

''காசு வேணுமா அக்கா? எவ்வளவு வேணும்?''

''கொஞ்சநேரம் அவசரப்படாமல் கேளடா...''

''சரி சொல்லக்கா ...''

மலர் விபரிக்கத் தொடங்கினாள்.

''சுந்தரேசன் சொலிசிட்டர்'' என்ற வார்த்தை வந்ததும் ரவி அவசரமாகக் குறுக்கிட்டான்.

''அவனா?'' என்றான்: ''அவன் அக்கா, இங்க பேமஸ் சொலிசிட்டர். சரியாகத் தண்ணிபோடுவான்.''

''நினைச்சன்... தம்பி...''

''அதுமட்டுமல்ல, அவன் ஜேர்மனிப் பெண்ணைக் கல்யாணம் கட்டியிருக்கிறான். தாய் தேப்பன்ர வற்புறுத்தலுக்காக டைவேர்ஸ் எடுத்திட்டு கலியாணம் கட்டக் கொழும்புக்கு வரப்போறானாம். இங்க கதை பரவி விட்டது. மை கோர்ட். அக்கா, அது நீயா? ஏமாந்திடாதை. நான் சொல்லுறதெல்லாம் சத்தியம் அக்கா... கடவுளே ஏமாறப் பாத்தியளே?''

''தம்பி... தம்பி'' என்று மலர் விம்மினாள்.

''அக்கா நான் குழப்பிவிட்டேனா?''

''இல்லையடா தம்பி, தெளியவச்சிருக்கிறாய். பெரியப்பாவைக் கூப்பிட்டு விடுகிறன். நீயே அவருக்குச் சொல்கிறாயா?''

''கூப்பிடுங்க...'' என்று ரவி படபடத்தான்.

பரமசிவத்தார் ஜேர்மனியிலிருந்து மருமகன் தன்னுடன் பேசக்கூப்பிடுகிறார் என நினைத்து ஆவலோடு

ஓடிவந்தார். பேசிவிட்டு வெளியில் வந்தபோது தளர்ந்து தள்ளாடிப் போனார். அப்படியே தலையில் கைவைத்த படி அமர்ந்தவர், சிறிது நேரத்தில் குலுங்கிக்குலுங்கி அழத்தொடங்கினார். அவருடைய துயரத்தில் அந்த லொட்ஜ் உண்மையில் கலந்து கொண்டது.

மறைத்து வைத்திருந்த இரகசியம் அம்பலமாகிவிட்ட கவலையில் சுந்தரேசனின் தாயும் தகப்பனும் நிலை குலைந்து போனார்கள்.

ரவி அதன் பின்னர் மலரோடு அரைமணி நேரம் பேசினான்.

* * *

# 8

அதிகாலை மீண்டும் ஒரு சோகம் லெர்ட்ஜ்சில் மார்கழிமாதப் புகாராகக் கவிந்துகொண்டது. சிங்கப்பூரி லிருந்து கனடாவிற்கு இணைப்பு விமானத்தில் தான் ஏறி விட்டதாக ராஜி அறிவித்தாள்.

''சிங்கப்பூர் எயர்போட்டில் கொஞ்சம் கஷ்டப்பட்டுப் போனன். படித்த இங்கிலீஸ் கொஞ்சம் உதவியது. சிரிப் பும் கொஞ்சம் உதவியது. துருவித்துருவிக் கேட்டாங்கள். பின்னர் விட்டிட்டாங்கள். ஆறு மணிநேரம் எயர்போட் டில் தங்கி, அடுத்த கனெக்டட் பிளைற் கனடாவிற்கு எடுக்கிறன். அவரும் கனடாவிலிருந்து பேசினார். பிரச் சினையெண்டால் தான் சிங்கப்பூர் வருவதாக...''

''மெத்தச் சந்தோசம் ராஜி...'' என்று ராஜியின் அப்பா பூரித்துப்போனார்.

''உன்னோட வந்த பொடியன், வசந்தன்... ஜேர் மனிக்குப் போகவந்தான்...?''

ராஜி சற்றுநேரம் மௌனம் சாதித்தாள். பின்னர், ''அவர் இங்க பிடிபட்டுப்போனார் அப்பா. கள்ளப் பாஸ்போர்ட் என்று திருப்பி உடனை கொழும்புக்கு அனுப்பப்போகினம். அவரோடை நான்கு பேர். ஒருத்த ருக்கும் இதனைச் சொல்லாதையுங்கோ.''

ராஜியின் அப்பா சோர்வோடு வந்தார்.

''என்னவாம்...?'' என்று பாலசுப்பிரமணியம் கவலை யோடு கேட்டார்.

''மகள் கனடாவிற்குப் பிளைற் எடுக்கிறா. சிங்கப்பூரிலிருந்து பேசினா.''

''அதுக்கேன் கவலைப்படுகிறீர்?''

''கவலைப்படாமல்... ஒரு குடும்பமாக எல்லாரும் இந்த லொட்ஜ்சில இருந்திட்டம்,''

''சரி... என்ன விசயம்?''

''வசந்தனும் இன்னும் மூன்று பேரும் சிங்கப்பூரில் பிடிபட்டிட்டாங்களாம், கள்ளப் பாஸ்போர்ட் எண்டு. கொழும்புக்குத் திருப்பியனுப்பப் போகினமாம்.''

கணப்பொழுதில் செய்தி சூரத் பிளேக்காகப் பரவி விட்டது.

''ஐயோ! என்ர பிள்ளை '' என்று தவமணி ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

''தெய்வமே இப்படிச் செய்திட்டியே? உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டதுக்கு இதுவா பயன்? எல்லாம் போச்சுதே '' என்று கதறியவாறு தளர்ந்துபோய் இரத்தினத்தார் போர்டிக்கோக் குந்தில் அமர்ந்துவிட்டார்.

இருவரையும் அனைவரும் கவலையோடு சூழ்ந்து கொண்டனர். கவலை, பச்சாத்தாபம், இரக்கம்... பல்வேறு உணர்வுகள் ஒவ்வொருவர் முகத்திலும் அப்பிக் கிடந்தன.

பாலசுப்பிரமணியம் இரத்தினத்தார் அருகில் அமர்ந்தார்.

''பாலா, நீ சொல்லச் சொல்லக் கேக்காமல் அனுப்பினன். இப்ப பட்டிட்டன். இனி எப்படி வாழப்

போறன்? குமருகளுக்காகச் சிறுகச் சிறுகச் சேர்த்தது. இப்ப ஒண்டாப் போச்சுது. மூன்றரை லட்சம்... செல வோட நாலுக்கு மேல... ஐயோ...''

''கவலைப்படாதை இரத்தினம். ஏஜன்டிட்ட பிளைற் செலவு, ஒழுங்குச்செலவு என்பன போகக் ,கொஞ்சம் வாங்கலாம்...''

''தருவானே பாவி?...''

''தராமல்...''

அன்று மத்தியானம் ஏஜன்ட் ராஜன் லொட்ஜிற்கு வந்தான். வந்ததும் வராததுமாக அவனை எல்லாரும் சூழ்ந்து கொண்டனர்.

''தம்பி, இப்படிச் செய்திட்டியே? ஏழை பாழையளை இப்படி ஏமாத்திட்டியே?''

''ஏமாத்திறதெண்டால் இப்ப இங்க வந்திருப்பனே? கொஞ்சம் பேச விடுங்கோ'' என்று ராஜன் எரிந்து விழுந்தான்: ''இப்படித் திரும்பி வாறது சகஜம். நான் எப்படியும் கெதியில வசந்தனை அனுப்பித் தருவன்...''

''இனி வேண்டாம். இதுவே போதும்... இங்க நிண்டு செலவழிக்க இனி ஏலாது. என்ர பிள்ளை எப்ப வரும்..? நாங்க ஊருக்கே திரும்பிப்போறம்...'' என்று கலங்கினாள் தவமணி.

''நீங்கள் இனி ஒண்டும் தரவேண்டாம் அம்மா. நான் என்ர செலவில அனுப்பித் தருவன்.''

''வெளிநாட்டு ஆசை எனக்கு இல்லாமல் போச்சுது'' என்றார் இரத்தினத்தார்.

''சிங்கப்பூரில் எங்கட ஆக்கள் பேசுகினம். தளர்ந்து போகாதையுங்கோ... எத்தனை பேர், ரெண்டு முறை மூன்று முறை திரும்பி வந்து போயிருக்கினம். லொட்ஜ் மனேச்சரைக் கேட்டுப்பாருங்கோ.'' ராஜன் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டான்: '' வாங்கோ உள்ளுக்குப்போய் கதைப்பம்.''

அவ்வேளை வசந்தனின் தொலைபேசி அழைப்பு வந்தது. அவன் குமுறிக்குமுறி அழுதான்: ''உவன்கள் சொன்னமாதிரி எங்களை அழைச்சுப்போக ஒருத்தனும் சிங்கப்பூருக்கு வரவில்லை. பாஸ்போர்ட்டைப் பாத்ததும் கள்ளம் எண்டு கண்டுபிடிச்சிட்டாங்கள். நாலு பேர்... தமிழ் தெரிந்த ஒருவர் அங்க எயர்போட்டில் இருந்த தால உள்ள தள்ளாமல் உடனடியாகத் திருப்பியனுப்பு கினம். நான் வரப்போறன். வேண்டாம் அப்பா. நான் உங்களோட கடையில நிக்கிறன்...''

இரத்தினத்தார் கோபத்தோடு வந்தார்.

''நீர் சொன்னபடி தம்பி, எயர்போட்டில ஒருத் தரும் வரவில்லையாம்.''

''நாங்கள் செற்பண்ணிய ஓபிசர் அன்டைக்கு எயர் போர்ட்டில இல்லை. தற்செயலாக அவருக்குப் பதிலாக, வேறொருவர் வந்திட்டார். அதுதான் 'புரப்பிளம்'.''

''மகன் எப்ப வருவான்...''

''மூன்று மணிக்கு வருவதாகத் தகவல்... அதுதான் சொல்லிப்போக வந்தனான். விரைவில திருப்பியனுப் புறம்...'' அவன் எழுந்திருந்தான்.

''இரும் தம்பி...'' என்றார் பாலசுப்பிரமணியம்: ''அவயள் தான் இனி வெளிநாட்டிற்குப் போகவில்லை என்கினம். அப்ப அவயின்ர காசைக் கொடுத்துவிடுமன்.''

''அது எப்படிக் கொடுக்கிறது? நான் சப் ஏஜன்ட். தரமாட்டான்கள், அனுப்பிவைப்பான்கள்.''

''நீர் ஒண்டும் அனுப்ப வேண்டாம். எங்கட காசைத் தாரும்.''

''சரி... நான் போய் பொஸ்சோடு கதைச்சிட்டு வாறன்.''

''போய்க்கதைக்க வேணாம். இங்கிருந்தே கதையும்'' என்றார் பாலசுப்பிரமணியம் திடமாக. ராஜன் அவரைக் கோபத்தோடு ஏறிட்டுப் பார்த்தான்.

''நீரே தந்தனீர்? விசர்க்கதை கதைக்கிறீர்.''

''நான் தந்தால் என்ன? இரத்தினம் தந்தால் என்ன? இப்ப நியாயம் தேவை. நியாயத்தை மனச்சாட்சியுள்ள எவனும் கேக்கலாம்.''

''போட்டுவந்து தான் நியாயமான முடிவு சொல்லலாம். நான் ஒண்டும் ஓடிப்போக மாட்டன். வசந்தனை அடுத்த பிளைற்றில திருப்பியனுப்புறன்.''

''அதுதான் வேண்டாமே? நீர் இங்க எத்தனை பேரிட்ட காசு வாங்கியிருக்கிறீர், பிஸ்னசைப் பழுதாக்கிக் கொள்ளாதையும்.''

''பெரியவர் வயசுக்கு மரியாதை தாறன். நான் ஆரெண்டு உங்களுக்குத் தெரியாது. கொழும்பில் வந்து என்னை வெருட்டேலாது. இப்ப கையசைத்தால் போதும் தக்சுகள் வருவான்கள், எல்லாரையும் கொட்டியா எண்டு ஒரு போன்கோலில உள்ள தள்ளிடுவன்'' என்றபடி ராஜன் எழுந்திருந்தான். எழுந்த வேகத்தில் தோளில்

அமர்த்தப்பட்டு கதிரையில் பொத்தென விழுந்தான். அவனின் தோளிலிருந்து தன் வலிமையான கரத்தை யெடுக்காமல்,

''தம்பி, உந்தச்சேட்டையளை இனியும் விடாதை, உங்கட ஏமாத்துகளைத் தயவு செய்து நிறுத்துங்கோ... தக்சுகளைக் கூப்பிடப்போறியோ? இந்தா போன் கூப்பிடு. பொலீசைக் கூப்பிடப்போறியோ இந்தா கூப்பிடு... அவை வரதுக்கிடையில் கோழிதிருகிற மாதிரி திரிகி எறிஞ்சிடுவன்'' என்றார். அவர் விழிகள் கனன்றன. சொன்னதைச் செய்துவிடுவார் போல் தோளில் பதிந்த கரம் கனத்தது.

லொட்ஜ் மனேச்சர் சங்கரவேல் ஓடிவந்தார்.

''ராஜன் டோன்ற் ஆர்கியு வித் கிம்'' என்று அவன் காதில் ஏதோ சொல்ல ராஜன் விதிர்த்துப்போனான். சற்று நேரம் எதுவும் பேசவில்லை. பின்னர் சொன்னான்: ''பிளைற் செலவு, மற்றச்செலவெல்லாம் போக திருப்பிக் கொடுக்கிறன்.''

''குறைய இரண்டரை கொடும்.''

அவன் சற்று யோசித்தான்.. பின்னர், ''சரி'' என ஒத்துக் கொண்டான்.

''போன் பண்ணி பணத்தை இங்க எடுப்பியும்.''

''நிச்சயமாகக் கொண்டு வருவன்...''

''அதெல்லாம் வேண்டாம், பணத்தை எடுப்பித்துத் தந்துவிட்டு இந்தவிடத்தை விட்டு ஒழுங்காகப் போய். மற்றவர்களையும் ஒழுங்காக அனுப்பிச் சீவியும்.''

''நானென்ன பிச்சைக்காரனே?'' என்றபடி ராஜன் தனது கையிலிருந்த பிறீவ்கேசைத் திறந்தான். கட்டுக்

கட்டாகப் புதுநோட்டுகள். அதில் இரண்டரை இலட்சத்தை உருவி எடுத்து எண்ணி இரத்தினத்தாரிடம் கொடுத்தான். படிவங்களில் ஒப்பங்களும் வாங்கிக்கொண்டான். பின்னர் விருட்டென்று எழுந்து வெளியேறினான்.

''நல்ல பொடியன், இப்படி நடக்கிறதுதான்'' என்றார் சங்கரவேல்.

''பாலா என்னை இந்த மட்டிலாவது காப்பாத்தினாய்'' என்றபடி இரத்தினத்தார் பாலசுப்பிரமணியத்தின் கரங்களைப்பற்றிக் கண்களில் ஒத்திக்கொண்டார்.

''விசரா, வசந்தன் வந்ததும் ஊருக்குப் போய்ச் சேர்...''

அவர்போய் மீண்டும் போர்டிக்கோக் குந்தில் அமர்ந்து கொண்டார். நினைத்துப்பார்க்க அவருக்கே வியப்பாக விருந்தது. தானா அப்படி நடந்துகொண்டார்? பிரயாண ஏஜண்டுகளால் ஏமாற்றப்பட்ட சோகக்கதைகள் யாழ்ப்பாணமெங்கும் பரவிக் கிடக்கின்றன. ராஜனிடம் சில நல்ல குணங்கள் உள்ளன. வெளிநாட்டுமோகம் எப்பொழுதுதான் ஒழியப்போகின்றதோ?

யாரோ அவர் முன் வந்து தயங்கி நின்றார்கள்.

அவர் நிமிர்ந்து பார்த்தார்...

சசிகலாவின் அம்மா சரஸ்வதி.

''அண்ணை உந்த ஏஜன்டுப் பொடியனிட்டதான் நாங்களும் காசு கட்டியிருக்கிறம். சசிகலாவைக் கனடாவிற்கு அனுப்ப பயமாக இருக்குது...''

அவர் அவளை இரக்கத்தோடு பார்த்தார்.

''பயப்படாதையுங்கோ, ஏமாத்த மாட்டான், அனுப்புவான். இன்னொரு பிள்ளை போயிட்டுது தானே? இந்தக் காலத்துப் பொம்பிளைப் பிள்ளையள் வலு சிமாட் பாருங்கோ... பொடியங்கள் மாதிரிப் பேந்தப் பேந்த முழித்துக்கொண்டு நிக்கமாட்டாளவை. எங்கயும் சமாளிச்சுவிடுவாளவை. யாழ்ப்பாணத்துக் கிடுகுவேலிகளுக்குள் அடங்கிக்கிடந்த பொம்பிளைப் பிள்ளையள் துவக்குத் தூக்கிப் போராடுகுதுகள்... இதை எப்பவாவது எண்ணியிருப்பமா?''

''நாளைக்குச் சசிகலாவிற்குப் பிளைற்...''

''ஒண்டுக்கும் பயப்படாதையுங்கோ... எல்லாம் நல்லா நடக்கும். நீங்கள் யாழ்ப்பாணம் திரும்பிப் போகேக்க ஒரு பெண்ணை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டு இன்னொரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு போவியள் போல இருக்குது—'' என்று பாலசுப்பிரமணியத்தார் சிரித்தார்.

''அண்ணை...'' ஷெல் துண்டைமிதித்தவள் போல சரஸ்வதி வெந்து துடித்துப் போனாள்.

''என்ன சொல்லுறியள்?''

''இல்லை .. உங்கட மகன் சுகீர்தனும் மலரும் ஒட்டிப் பேசிக்கொண்டு கோல்பேஸ் பக்கம் போறதைக்கண்டன். இரண்டையும் பார்க்க உண்மையில சந்தோசமாக இருக்குது. நல்ல சொத்துப்பத்து சாதி சனமான குடும்பம் கவலைப்படாதையுங்கோ.''

சரஸ்வதி எதையோ சொல்ல முயன்றபோது இரு இளைஞர்கள் மோட்டார் சயிக்கிள் ஒன்றில் வந்து இறங்கினர். ஜீன்சும் ரீ சேர்ட்டும் அவர்களது கட்டுமஸ்

தான உடம்பைப் பறைசாற்றின. பாரம் தூக்குபவர்கள் போலும். கைகள் திரண்டுகிடந்தன.

அவர்கள் இருவரும் மனேச்சரின் அறைக்குள் நுழைந்து கொண்டனர்.

அவர்களின் வருகை அங்கு நின்று கொண்டிருந்தவர்களுக்கு ஐயுறவை ஊட்டியது. ராஜன் அனுப்பி வைத்திருப்பானோ? பாலசுப்பிரமணியத்தாருக்கு செப்பமாக நடக்கப்போகுதோ?

அறையைவிட்டு வெளியில் வந்த சங்கரவேல், ''புஸ்பாவை ஒருக்கா வரச்சொல்லுங்கோ... மேல்மாடி'' என்று ஒருவரிடம் கூறினார்.

''இது வேறை விசயம்...''

புஷ்பா அவசரமாக இறங்கி ஓடிவந்தாள். மனேச்சரின் அறைக்குள் நுழைந்தாள்.

''நீங்கதானா புஸ்பா .. துரைத்தினம், சுதுமலே...''

''ஓம்...''

''ஐடென்ரிக்காட் இருக்குதா?''

''இருக்குது மேல...''

'' சுறுக்கா எடுத்து வாங்க...''

'' ஏன்?'' புஷ்பாவைச் சிறிது பயம் பற்றிக்கொண்டது. தயங்கினாள்.

'' பயப்படவேணாம்; எடுத்து வாங்க .''

அவள் மேலே சென்று அடையாள அட்டையுடன் வந்தாள். அவன் அதை வாங்கிக் கவனமாகப் பார்த்தான்.

'' இவதான் புஸ்பா...'' என்றார் சங்கரவேல்.

'' நீங்க சாட்சி...'' என்று ஒருவன் சிரித்தான்.

''இதில் ஒரு கையெழுத்துப் போடுங்க. உங்களுக்கு வெளிநாட்டிலயிருந்து காசு வந்திருக்குது; இருபத்தினாலாயிரத்து எண்ணூற்றி ஐம்பது இந்தாங்க...'' அவன் கையிலிருந்த பிரீஃப்கேசைத் திறந்து காசுக்கட்டொன்றை எடுத்து அவளிடம் நீட்டினான். வாங்கிக்கொண்டு, ''யார் அனுப்பியது?...'' என்று இழுத்தாள்.

''அது எங்களுக்குத் தெரியாது. கொடுக்கச்சொல்லி வந்தது. அவ்வளவுதான்.''

''உண்டியலில் வந்தது. சொல்லமாட்டாங்க. வாங்கிக் கொள்ளும். ஆர் அனுப்பியிருப்பினம் எண்டு தெரியாதே?'' என்று சங்கரவேல் சிரித்தான்.

''தெரியும்.''

''சரிம்மா வர்றம்' முதலாளி வாறம்.''

அவர்கள் எழுந்தார்கள்.

''தம்பி'' என்றாள் புஷ்பா.

''என்னக்கா?''

''தாங்ஸ்'' என்றபடி ஒரு ஐநூறு ரூபா தாளை எடுத்து நீட்டினாள்.

''வாண்டாம் அக்கா. அவங்க வெளிநாட்டில கஷ்டப் பட்டு உழைச்சு யாப்னேயிலிருந்து கஷ்டப்பட்டு வந்த உங்களுக்கு அனுப்பியிருக்காங்க. எங்கட கொமிசன் இருக்குது. கவனமா யாப்னேக்குக் கொண்டுபோங்க.''

அவர்களின் மோட்டார் சயிக்கிள் புறப்பட்டுச் செல்கிற ஒலி எழுந்து தேய்கின்றது.

* * *

# 9

மேற்கு வானில் கதிர்கள் ஒடுங்குவதைப் பார்த்த வாறு, கோல்பேஸ் கடற்கரையில் அவர்கள் நடந்தனர். கடற்கரை ஒடுங்கி நீண்டு கிடக்கின்றது. மணல் இல்லாத புற்றரையாக அது பரந்து கிடக்கிறது. காற்றாடிவிடும் சிறுவர்களும், ஜோடி ஜோடியாக அமர்ந்து குறும்புகள் செய்து கொண்டிருப்பவர்களும், காற்று வாங்க வந்தோரு மாக கடற்கரை நிரம்பிக் கிடந்தது.

''ஒன்று... இரண்டு, மூன்று...'' என மலர் கூறத் தொடங்க, ''என்ன மலர்?'' என்றான் சுகீர்தன்.

''துறைமுகத்திற்குள் நுழையக் காத்திருக்கின்ற கப்பல்களை எண்ணினன்.''

''எத்தனை?''

''எண்ண முதல் தடுத்திட்டியளே?''

''நான் தான் எல்லாவற்றையும் தடுக்கிறேன் போல இருக்குது.''

அவன் ஒரு பேச்சிற்குத் தான் சொன்னான். மலரின் முகம் வாடியது.

''அதை நினைவு படுத்தாதையுங்க. நான் தப்பியது அருந்தப்பு. நீங்களில்லாட்டில் ஏமாந்து போய்த் தற் கொலை செய்திருப்பன்...''

''சரி எண்ணும்...'' என்று அவன் பேச்சை மாற்றி னான். அவள் எண்ணி ''பதினாறு...'' என்றாள். காற்று சற்றுப்பலமாக வீசியது. கப்பல்கள் அலையெறிதலால்

தாக்கப்படுவதற்கு அவற்றின் பக்கங்களில் திரளும் வெண்ணிற நுரைத்திரள்கள் சாட்சியமாயின. காற்றின் வீசலால் அவள் அணிந்திருந்த காஃப்ஸ்கேட் கிளம்பப் பார்த்தது. வலக்கரத்தால் காலோடு அழுத்திக் கொண்டாள்.

"மலர்..."

"என்ன? சொல்லுங்கோ"

"இனி என்ன செய்ய உத்தேசம்?.."

"ஊருக்குப் போய் ஏதாவது ஒரு வேலை... ரீச்சிங்கிற்கு றை பண்ணப் போறன். இப்படியே இருந்துவிடப் போறன்..."

"ஏன்?"

"ஒரு முறை பட்ட சூடு போதும்..."

"எல்லாரும் சுந்தரேசன் மாதிரியா?"

"நான் அதைச் சொல்லவில்லை. உங்களுக்கு யாழ்ப்பாணச் சமூகத்தைத் தெரியாதா? எனக்கு இனி எப்பவும் வசைதான். எப்படியெல்லாம் பேசப்போகுது தெரியுமா?"

"அப்படியொண்டும் பேசாது" என்றான் சுகீர்தன் துயரத்துடன். "தங்கச்சிக்கு நாளைக்குப் பிளைற். அவ சுகமாகக் கனடாவிற்குப் போயிடுவா. சந்தேகமில்லை. நானும் அம்மாவுந்தான் இனி ஊரில்..."

மலர் அவனைத் திரும்பிப் பார்த்தாள். மாலைக் கதிரின் தழுவலில் அவள் மிகவும் அழகாக இருந்தாள். காதுகளில் தனி முத்துத் தோடுகள் பளபளத்தன. அவனைப் பார்த்து அவள் உதடுகள் பிளந்து சிரித்த போது முத்துக்கள் மங்கிப்போயின.

கொழும்பு லொட்ஜ்

"எனக்கு ஐஸ்கிறீம் வாங்கித் தாருங்க."

அவன் அவளை அழைத்துச் சென்று அலெறிக்ஸ் கோன் வாங்கிக் கொடுத்தான்; வாங்கிக் கொண்டாள்.

"எனக்கு இன்னொன்று வேணும்..." என்று அவள் சிரித்தாள். அவளுடைய சிறுபிள்ளைத்தனம் அவனுக்கு மிகவும் பிடித்ததாகவிருந்தது.

"ஒன்று போதுமா?"

"பார்க்கிறவை சிரிப்பினம். இல்லாவிட்டால் ஐந்து குடிப்பன்."

அவள் இரண்டாவது ஐஸ்கிறீம் கோனை நாவினால் நக்கியவாறு அவனோடு கூடவே நகர்ந்தாள்.

"மலர்.."

"என்ன?"

"எங்கையாவது கொஞ்ச நேரம் இருந்து பேசுவோமா?"

"சரி."

அப்படியே நிலத்தில் அமர்ந்து கொண்டாள். அவர்களைக் கடந்து சென்ற இளைஞர்கள் மலரையே கண் கொட்டாமல் பார்த்தனர். அவன் மீது பொறாமைக் கணைகளை வீசிவிட்டுச் சென்றனர். ஒருவன் தன் எண்ணத்தை அடக்க முடியாமல், "ஹொந்த வடு, மச்சான்" என்றான் தன் நண்பனிடம்.

"என்னவாம்..." என்று மலர் கேட்டாள்.

"விளங்கவில்லை."

'' பொய் 'ஹொர்ந்த வடு' என்றால் நல்ல சரக்கு .'' அவள் கலகலவெனச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அவனும் கலந்து கொண்டான்.

'' கொழும்புக்கு வந்து சிங்களம் படிச்சிட்டீர்.''

அவள் விளக்கம் சொல்லிச் சிரித்தது அந்தச் சிங்கள இளைஞனுக்குக் கேட்டது. அவன் திரும்பிப் பரிதாப மாக ''சமாவென்ன நங்கி'' என்றான்.

அவள் சிரித்தாள்.

வானம் இன்று என்றுமில்லாத அழகோடு விளங்குவ தாக அவனுக்குப் பட்டது. இந்த உலகம் நிம்மதியும் அழகும் நிறைந்ததாகத் தெரிகிறது.

'' மலர்...''

'' என்ன?''

'' ஒன்றுமில்லை. இப்படியே எப்பவும் இருந்து விட லாம் போல இருக்குது.''

''எனக்குந்தான் சுகீர்தன் என்ர வாழ்க்கையில் இன்று போல இனிமையான ஒரு தினம் வராது. நீங்க என்னில காட்டுற அன்புக்கு, ஆதரவிற்கு இந்தப் பிறவியில நான் உங்களுக்கு என்ன கைமாறு செய்யப்போறனோ?'' அவள் விழிகள் கலங்கின.

''என்ன மலர், எங்களுக்குள் இப்படியான வார்த்தை கள் வேண்டாம்.''

பெண்ணே, உன்னை எவ்வளவு தூரம் நேசிக்கிறேன் தெரியுமா? இன்னுமா உனக்குப் புரியவில்லை. தெரிந்தும் தெரியாததுபோல நடிக்கிறாயா? - அவன் உள்ளம் ஆர வாரித்தது.

மலர் அவன்பக்கந் திரும்பினாள்.

''எங்கட லொட்ஜ்சில எத்தனை மாதிரியான ஆக்கள்...''

''அது ஒரு கதம்ப மலர்... அங்க இருக்கிற வைர முத்தண்ணரை நினைக்கேக்க எனக்குச் சிரிப்புத்தான் வரும். அவருடைய நாலு பிள்ளையளும் வெளிநாட்டில. அவரும் அவருடைய மனிசியும் பிள்ளையளோட கதைச்சுக் காசு வாங்கிக்கொண்டு போக வந்திருக்கினம். இங்கவந்து இரண்டு மாதமாகுதாம். ரெண்டு பேர் காசு அனுப்பிப் போட்டாங்களாம். இன்னமும் ரெண்டுபேர் அனுப்ப வில்லையாம். அதுக்காகக் காத்திருக்கினமாம். அண்டைக்கு இரத்தினத்தார் வைரமுத்தரைக் கேட்டார், 'கோதாரி விழுவானே உனக்கு ஏன் இவ்வளவு காசு? எல்லாப் பிள்ளையளையும் வெளியில அனுப்பிப்போட்டு ஊரில கனிமூன் கொண்டாடிறியள். இருந்தாற்போல மண்டையைப் போட்டால் ஆருமெல்லோ கொண்டுபோகப் போறாங்கள்' என்றார். யாழ்ப்பாணத்தில் இப்ப வைர முத்தர் மாதிரிப் பலபேர் இருக்கினம்.''

''பாலசுப்பிரமணியத்தார் ஒரு நல்ல மனிசர் என்ன? அன்றைக்கு என்னைப் பார்த்துச் சொன்னார், நீ கெட்டிக்காரி, நல்லா இருப்பாய் என்றார்.''

''அவருக்கு மனிசியில்ல... மூன்று பிள்ளையள்...''

''மனைவியில்லாமல் எப்படி மூன்று பிள்ளையள்?'' என மலர் சிரித்தாள்.

''மனைவி செத்துப்போனா...''

''சரி சொல்லுங்க...''

''மூன்றும் இயக்கத்திலயாம். ஒருவன் ஆனையிறவுச் சண்டையிலும், மற்றவன் பூநகரிச் சண்டையிலும் வீர மரணம் அடைந்துவிட்டினம். அதனால் மனமிறுகி எல்லா விடங்களும் திரிவாராம். பென்சன் வரும்... யாழ்ப்பாணம், கொழும்பு என்று இடம்மாறித் திரிவார். கொழும்பில ரெண்டு மூண்டு முறை பொலிசும் பிடிச்சதாம். இந்த லொச்சில தான் அடிக்கடி வந்து நிற்பாராம். எல்லாருக்கும் அந்தாளில பயம். ஒருமுறை ஒருத்தன் குடிச்சுப் போட்டு லொட்ஜ்சுக்குள் புகுந்து கப்பம் கேட்டிருக்கிறான். வழக்கமாக அவன் அப்படித்தானாம். ஐ.ஆர்.சி. கலாட்டா செய்திருக்கிறான். இந்தாள் ஒருதடவை பொறுக்க முடியாமல் அவனைப் பிடித்து நொறுக்கு நொறுக்கென்று உதைச்சுத் தள்ளி விட்டுதாம். அதுக்குப்பிறகு அவன் அந்தப்பக்கம் வாறதில்லையாம்.''

மாலை கவிந்து பரவியது.

இருவரும் எழுந்து நடந்தனர். அவர்கள் நடந்து செல்லும் இடங்களில் அமர்ந்திருந்த இளங்காதலர்கள் சுற்றாடலை மறந்திருந்தனர்.

''இதென்ன இப்படியெல்லாம் புப்ளிக்கில நடந்து கொள்ளுறாங்கள்'' என்றாள் மலர்: ''அங்க பாருங்க ஏன் அவங்கள் குடை பிடித்துக்கொண்டிருக்கிறாங்கள்... கனஜோடிகள் அப்படி . வெயிலுமில்ல, மழையுமில்ல... ஏன் குடை?''

''தெரியாமலா கேட்கிறீர், மலர்?''

''ஓமோம்...''

''கிட்டப்போய்ப் பார்ப்போமா?''

''விளங்குது வேண்டாம்...''

## கொழும்பு லொட்ஜ்

கோல்பேஸ் கடற்கரையில் உச்சிவெயிலில் குடை பிடித்து அமர்ந்து, காதல் கதை பேசி, அதன் உச்சமாக குடைமறைப்பில் ஸ்பரிச சுகம் காண்கின்ற காதலர்களை அவள் பஸ்சில் போகும்போது கண்டிருக்கிறாள். ஆட்கள் வரும் பக்கமாக் குடை திரும்பி மறைப்பைக் கொடுக்கும்.

''போவோமா?''

'' சரி...'

அவர்கள் வெள்ளவத்தைக்குச் செல்கின்ற பஸ்சில் ஏறிக்கொண்டனர். அருகருகே அமர்ந்து கொண்டனர்.

''மலர்...''

'' ...ம்... சொல்லுங்க...''

அவன் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டான். அந்த ஆடவனின் சங்கடம் அவளுக்குத் தெரிந்தது. நெருங்கி அமர்ந்து கொண்டாள். அவளது வலக்கரம் அவன் தொடையின் அருகே ஸ்பரிசித்தது. அவன் தன்னையறியாமல் தன் இடக்கரத்தை அதன்மேல் பதித்தான். அவள் விலக்கிக் கொள்ளவில்லை.

குளிர்ச்சி... வெம்மை... நடுக்கம்!

அவள் தன் தலையை அவனது தோளில் மெதுவாகச் சாய்த்தாள்.

''நாளைக்கு நாங்களும் ஒரு குடை வாங்குவோம்.''

சூழலை மறந்து இருவரும் கலீரெனச் சிரித்தனர்.

• • •

# 10

**போ**ர்டிக்கோக் குந்தில் பாலசுப்பிரமணியம் அமர்ந்திருந்தார். அவர் அருகில் வைரமுத்தர் அமர்ந்து வெற்றிலை மென்றுகொண்டிருந்தார்.

''யாழ்ப்பாணத்து வெத்திலை மாதிரிக் கொழும்பு வெத்திலை இல்லை. பாக்கும் பச்சைப்பாக்கு... காறுது.''

அவர் கூறியவற்றைக் கவனியாததுபோல் பாலசுப்பிரமணியம்... ''இப்ப இரத்தினத்தார் கிளாலியில் வள்ளத்துக்கு கியூவில் நிப்பார்'' என்றார்.

''ஓமோம், அவன் விசரன்... இங்க கொஞ்சநாள் நிண்டு பொடியனை ஒருவிதமாக வெளிநாட்டிற்கு அனுப்பியிருக்கலாம்.''

பாலசுப்பிரமணியம் வைரமுத்தரைத் திரும்பிப் பார்த்தார்.

''நீர் நாலு பிள்ளையளை வெளிநாட்டிற்கு அனுப்பியதால் சொல்லுநீர். அது அந்தக்காலம். இப்ப கஷ்டம்... அதுசரி, மற்ற ரெண்டு பொடியளும் காசு அனுப்பி விட்டாங்களே?''

''அதுதான் இல்லை... கலியாணம் கட்டிக் குடும்பமாக வாழ்கிற மூத்தவன்கள் ரெண்டு பேரும் அனுப்பி விட்டான்கள். மூன்றாமவனுக்கு முப்பத்திரண்டு வயது. கடைசியானுக்கு முப்பது. காசு அனுப்பச்சொல்லிக் கேட்டால், என்னோட இங்க வந்த சந்திரனுக்குக் கலியாணமாகி ஒரு பிள்ளையும் இருக்குது என்கிறான். மற்றவன் தன்ர சிநேகிதனுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து

பொம்பிளை வந்திட்டுது என்கிறான். இன்னொன்றும் சொல்கிறான்... தன்ர இன்னொரு சிநேகிதன் ஆரோ ஒரு கன்னடக்காரியைக் கட்டிவிட்டானாம். நான் காசு அனுப்பச்சொல்லுறன்... அவங்கள் உதுகளைக் கதைக் கிறான்கள்..."

பாலசுப்பிரமணியம் பெரியதாகச் சிரித்தார்.

"நீ சிரிக்கிறாய்..." என்று வைரமுத்தர் எரிந்து விழுந்தார்.

"அவங்கள் காசு அனுப்புறதுக்கு முதல் நீ ரெண்டு பொம்பிளையளை அனுப்பிவை என்கிறான்கள். அது களுக்கும் காலாகாலத்தில கட்டிவைக்கவேணும். உனக்கு ஒரு எண்ணம் அப்பிடியில்லை. ஏதோ ஐடங்கள், பணங் காய்ச்சிகள் என்று எண்ணியிருக்கிறாய்..."

"நினைச்சோணை செய்யலாமே? பேசி, பொருத்தம் பார்த்து, சாதிசனம் பார்த்து... சீதனம் முற்றாக்கி... அதுவும் இப்ப வெளிநாடென்றால் பொம்பிளை தரத் தயங்குகினம். எனக்குத் தெரிந்த ஒரு இடத்தில் ஒருத்தி கேட்கிறாள், வெளிநாட்டில இருக்கிற பொடியன்ர மெடிக்கல் செக்கப் றிப்போர்ட் தேவையாம்."

"புத்திசாலிப்பெண், யாழ்ப்பாணத்தாருக்கு இதெல் லாம் வேணும், இன்னமும் வேணும். நிலமை இப்ப தலை கீழாக மாறுது. இஞ்ச வைரமுத்து நான் சொல்றதைக் கேளும்... உம்மட சொந்தம் பந்தத்தில் ஒண்டுக்கும் வழியில்லாதிருக்கிறதுகளில பார்த்துப் பேசி அனுப்பி வையும். கடைசிக்காலத்தில் உங்களை அந்தக் குடும்பங்க ளாவது பார்த்து அனுப்புங்கள்."

"சொந்தத்தில் இருக்கினம், என்னைக் கேட்டவை... நான்தான் மறுத்திட்டன், இண்டைக்குப் பொடியளைக்

கேட்பம்... செலவோட எடுக்கிறதெண்டால் உடனை அனுப்பிவைப்பம். தங்கச்சிமாரின்ர பிள்ளையள். நீ சொல்லுறது எனக்கும் சரியாகப்படுகுது.''

''பொடியளை என்ன கேக்கிறது? சிங்கார நாச்சியார் வந்தாலே போதும் என்று ஓமெண்டுவாங்கள். நீ இருந்து பார்...''

லொட்ஜ் கேற்றைத் திறந்துகொண்டு இரண்டு பொலிஸ்காரர் வந்தனர். அவர்களைக் கண்டதும் பாலசுப்பிரமணியத்தின் முகம் மெதுவாகச் சிவந்தது.

''இப்ப ஏன் வாறான்கள்...?''

''மெதுவாகக் கதையும்.''

''முந்தி ஒவ்வொரு நாளும் வருவான்கள்... முந்நூறு, நானூறு எண்டு லொட்ச் மனேச்சரிட்ட வாங்கிச்செல்வான்கள். இல்லாவிட்டால் செக் பண்ணுறம், அரெட்ஸ் பண்ணுறமெண்டு வெருட்டி எத்தனை தடவை றக்றக்காக வந்து குதித்து... குறித்த வயதுப் பிள்ளைகளை கதறக் கதற றக்குகளில் ஏற்றிச்சென்று... காசு வாங்கிவிட்டு... எத்தனை கொடுமைகள் நடந்தன? இனியும் நடக்கத்தான் போகுது...''

சற்று நேரத்தில் பொலிசார் இருவரும் வெளியேறிச் சென்றனர்.

அவர்களின் பின்னால் சிங்காரவேல் கூடவே வந்து வழியனுப்பி வைத்தார்.

''பரதேசிகள்... நூறு வாங்கிச் செல்லுதுகள்'' என்று பாலசுப்பிரமணியத்தாரைப் பார்த்துக் கூறினான்.

''வெளிநாட்டுக்காசில அதுகளுக்கும் சேரட்டுமேன்.''

''அம்மான் எப்ப யாழ்ப்பாணம் போகப் போறியள்?''

''ஏன்ராப்பா... நானுனக்குச் சுமையே? காசு ஒழுங்காக் கட்டுறன் தானே?''

''அதுக்கில்லை அம்மான்... நீங்க இருந்தால் எங்களுக்கும் ஒரு பாதுகாப்பு .. உங்கட மனிசி இந்த லொட்சில செத்ததிலிருந்து...''

''நான் அடிக்கடி இங்கதான்... அவ இங்க இருக்கிறதா ஒரு பிரமை ..'' அவரின் விழிகள் கலங்கின. எவ்வளவு ஆசையோடு அவள் இங்க வந்தாள்?

''என்ன நடந்தது...?'' என்றார் வைரமுத்தர் கவலையோடு.

பாலசுப்பிரமணியம் உறைந்துபோய்ச் சற்றுநேரம் அமர்ந்திருந்தார். அவருடைய வாழ்க்கையைத் திசை மாற்றிய சம்பவங்கள் இந்த லொட்ஜ்சில் தான் நடந்தேறின. அவருடைய இறுகிப்போன இதயத்தை நெகிழ்த்தும் நினைவழியாச் சுவடுகள் அவை.

யாழ்ப்பாணத்துப் பெற்றோருக்கு ஏற்படுகின்ற ஆசை அவருக்கும் ஏற்பட்டது. ஏ. எல். சோதனையில் இரண்டு புள்ளிகளால் பல்கலைக்கழக அனுமதி கிடையாது ஏமாந்து போன மூத்தவன் சுரேந்திரனை வெளிநாட்டிற்கு அனுப்பினால் என்ன? அவனிலும் குறைவான புள்ளிகள் எடுத்த பிரதேச மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் ஆர்ப்பாட்டமாகப் படிக்க தான் வெளியில் வீதியில் தள்ளப்பட்டதை அவனால் தாங்கமுடியாது இருந்தது.

அவனை அழைத்துக்கொண்டு கொழும்புக்குப் புறப் பட்டபோது அவருடைய மனைவி பத்மாவும் தானும் கூட வருவதாகப் புறப்பட்டுவிட்டாள்.

இளந்தாரிப்பிள்ளையைத் தேப்பனோடு தனிய அனுப்புவதிலும் தாயும் கூடவந்தால் பாதுகாப்பு என்பது அவளது எண்ணம்.

அவர்கள் மூவரும் இந்த லொட்ஜ்சில் அறையெடுத்து ஏஜண்ட் ஒருவனிடம் பணத்தைக் கட்டிவிட்டுப் பதினைந்து நாட்களுக்கு மேலாகப் பயணத்தை எதிர்பார்த்துத் தங்கி யிருந்தபோதுதான் அந்தநடக்கக்கூடாதசம்பவம்நிகழ்ந்தது.

ஒருநாள் நள்ளிரவில் றக்குகளிலும், ஜீப்புகளிலும் வந்து பொலிசார் லொட்ஜ்சைச் சூழ்ந்துகொண்டனர்.

''கொட்டியா, கொட்டியா'' என்று எடுத்ததெற் கெல்லாம் உச்சரித்துக்கொண்டு எல்லாரையும் முகமூடி தரித்த ஒருவன்முன் நிற்கவைத்தனர். அவன் பார்த்துத் தலையாட்டிய எல்லாரையும் றக்குகளில் ஏற்றினர். அழுகை, ஓலம் எங்கும் நிறைந்தது.

சுரேந்திரனைப் பார்த்து முகமூடி தலையாட்டிய போது, ஒரு முரட்டுப் பொலிஸ்காரன் அவனைத் தோளில் கரம்பதித்துத் தள்ளிவிட்டான். பாலசுப்பிரமணியம் பயந்து நடுங்கி முன்னே ஓடிவந்தார்.

''சேர், அவன் ஒன்றும்தெரியாத பிள்ளை. வெளி நாட்டிற்குப் போறதுக்காக எங்களோட வந்திருக்கிறான்.''

'' அவன் கொட்டியா. விசாரிக்கஓணும்; நீ போ அங்காலை.''

''சேர், சேர்... ஹி இஸ் மை சன்... இனசன்ற் பலோ;''

''போ... போ.''

''ஐயோ...'' என்று பத்மா அலறினாள்: ''என்ர பிள்ளை.. என்ர பிள்ளை.''

முப்பது பேர்வரையில் ஏற்றிக்கொண்டு சென்றனர். எல்லாரும் தலையிலும், மார்பிலும் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தனர். றக்குகளின் பின்னால் அழுது குளறிக் கொண்டு வீதிவரை ஓடிச்சென்றனர்.

''சூட் பண்ணுவம் போங்க.''

அவர் திகிலோடு திரும்பி வந்தார். வயிறு பற்றி எரிந்தது. நெஞ்சு படபடவென அடித்துக்கொண்டது. எதுவுமறியாத அப்பாவி. என்ன செய்வாங்களோ? 'குற்ற வாளிகளை உருவாக்கப்போறாங்கள்.' கவலையோடு உள்ளே ஓடிவந்தார்.

பத்மா கதிரையொன்றில் அப்படியே அமர்ந்திருந் தாள். ஆடவில்லை; அசையவில்லை; பேசவுமில்லை. இப்படிப்பட்ட மரணங்களை அவர் கதைகளிலும் படங் களிலும்தான் கண்டிருக்கிறார்.

அவரோடு இருபத்தாறு வருடங்கள் பிரியாது, முரண் படாது வாழ்ந்த பத்மா கணப்பொழுதில் தாங்கமுடியாத சோகத் தாக்குதலிற்குப் பலியாகிவிட்டாள்.

கனத்தையில் அவள் தீயில் கருகிக் கரைந்தபோது அவர் இதயத்தில் வன்மம் குடிகொண்டது. ஆயிரக் கணக்கில் செலவழித்துச் சுரேந்திரனை வெளியில் எடுத்து யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்தபோது அந்த வன்மம் அதிகரித்திருந்தது. ஒன்றன்பின்னொன்றாக அவரது மூன்று பிள்ளைகளும் இயக்கத்திற்குப் போனபோதும், இருவரின் உடல்கள் இந்த மண்ணில் விதைக்கப்பட்ட போதும் அவர் இதயம் கனத்ததேயொழியக் கலங்கவில்லை.

''அம்மான்'' என்று யாரோ அவரை அழைத்தார்கள். பனித்த விழிகளோடு நிமிர்ந்து பார்த்தார். சுகீர்தனும் மலரும் எதிரில் நின்றிருந்தனர்.

''நாங்கள் இண்டைக்கு யாழ்ப்பாணத்துக்குப் போகப் போறம்.''

''ரெண்டுபேருமா?'' என அவர் தன்னை நிலைப்படுத்திக்கொண்டு குறும்பாகக் கேட்டார்.

''எல்லாருந்தான்.''

''அப்ப கலியாணம் யாழ்ப்பாணத்திலா?''

மலர் வெட்கத்துடன் தலைகுனிந்துகொண்டாள்.

''ஓம் அம்மான்'' என்று சுகீர்தன் நிறைவோடு சிரித்தான்: ''நீங்களும் வரவேணும். கட்டாயம் வரவேணும்.''

'' இருந்தால் நிச்சயம் வருவன் பிள்ளையள். நானும் இண்டைக்குக் கிளம்பலாம் என்றிருக்கிறன். பச்சைத் தண்ணியைக் குடிச்சுக்கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணம் போல வராது பிள்ளையள்.''

அன்று மாலை பையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்ட போது இராமையா கேட்டான்: '' சார் எப்ப திரும்ப வருவியள்?''

''எப்பவாவது அவள் அழைக்கும்போது.''

லொட்ஜ்சின் கேற்றைக் கடக்கும்போது, '' பத்மா பேர்யிட்டு வாறன்'' என்று தனக்குள் கூறிக்கொண்டார். இதயம் இலேசாகி அமைதி பிறந்திருந்தது.

அச்சுப் பதிப்பு: போஸ்கோ பதிப்பகம் - நல்லூர்.

காலல் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஈழத்தின் நவீன தமிழிலக்கியத்துறையில் தனது ஆளுமை யின் சுவடுகளை ஆழமாகப் பதித்து நிற்கும் முதல் வரிசைப் படைப்பாளி செங்கை ஆழியான் ஆவர். செங்கை ஆழியான் சமூக வரலாற்றை மனிதநேய நோக்கில் காண முற்பட்டவர். தனி மனிதரையும், சமூக மாந்தரையும் அவர் களது இயல்பான உணர்வோட்டங்களுடன் இனங்காட்ட விழைந்தவர்; காட்டியவர். குறிப்பாகக் கீழ், நடுத்தர வர்க்கச் சமுதாய மன அவசங்களே ஆழியானது ஆக்கங்கள் பலவற்றினதும் அக நிலையாக அமைந்தன. இவற்றைப் பல்வேறு தளங்களில் நின்று இயற் பண்புடன் வெளிப்படுத்திய வகையிலேயே அவரது தனித்தன்மை புலப்படுகிறது.

- கலாநிதி நா. சுப்பிரமணியன்.

அட்டைப் படம்: குரு பட்டுத்துணி திருநெல்வேலி.